விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது ═══ Valampurii ═══

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (07.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழில் அதிகரித்துச் செல்லும் கைதுகள் குழப்பத்தில் முன்னாள் போராளிகள்!

### 20 இற்கும் மேற்பட்டோர் நேற்றுவரை கைது

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை எனக் கூறி யாழில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு பொலிஸாரால் 25 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளதாக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. கைது செய்யப்படுவதற்கான அத்தாட்சி ஆவணங்கள் கைதிகளின் உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

ஆனால் கைது பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லையென்று கைதானவர்களின் உறவினர்கள் சிலர் கூறுகின்றனர்.

யாழில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் முன்னாள் போராளிகள் குழப்பத்தில் காணப்படுகின்றனர்.

கடந்த மூன்று (20ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் கைதுகளால் அச்சத்தில் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மீண்டும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் திடீரென கைது செய்யப்படுவதனால் அவர்களின் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் கவலையடைந்துள்ளனர்.

இவ்வாறான கைதுகள் தொடர்பில் என்ன செய்வது எனத் தெரியாமல் அவர்கள் கண்ணீரும்கம்பலையுமாக மனித உரிமை ஆணைக் குழு, (20ஆம் பக்கம் பார்க்க)

# 10 மாணவர்களைத் தேடி வலைவீச்சு

# 6 பேர் நேற்றுச் சரணடைந்தனர்!

### ஏனையோர் இன்று சரணடைவர்?

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேரினைத் தேடி பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர் வலை வீசியுள்ளனர். இப் 10 மாணவர்களில் 6 பேர் நேற்றையதினம் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் சரணடைந்துள்ளனர். ஏனைய நால்வரும் இன்றையதினம் சரணடையவுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்களை நோக்கி திரும்பும் கமராக்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள ஊடகவியலாளர்களினை இராணுவத்தினர் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் படம் எடுப்பதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் கடந்த 4-ம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் அங்கு வந்திருந்த சிவில் உடை தரித்திருந்த இராணுவத்தினராலும், புலனாய்வாளர்களாலும் புகைப்படம் எடுக்கப்பட்டனர்.

நேற்றையதினம் பண்ணைக்கு அண்மையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவின் போதும் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்களினை தமது புகைப்படக் கருவியின் மூலம் இராணுவத்தினர் படம் எடுத்துள்ளனர்.

இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களின் இத் திடீர் செயற்பாட்டினால் ஊடகவியலாளர்கள் அச்சத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தரின் சடலம் ஒப்படைப்பு

விபத்துக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 10 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு அருகில் விபத்துக்குள்ளான நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையைச் சேர்ந்த நிஷாந்த ராஜபக்ஷ என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (எ-11)

## விசாரணையிலிருந்து ஷிராணி வெளிநடப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை குற்றம்சாட்டி பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை மேற்கொண்டிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் விசாரணைகளிலிருந்து அவர் வெளிநடப்பு செய்துள்ளார்.

நேற்று விசாரணையின் போது பல பக்க ஆவணங்களை ஷிராணி பண்டாரநாயக்கவிடம் கொடுத்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு அந்த ஆவணங்கள் அனைத்தையும் நாளை வெள்ளிக்கிழமைக்குள் (இன்று) படித்துவிட்டு அவை தொடர்பான கேள்விகளுக்கு நாளையே (வெள்ளிக்கிழமையே) பதிலளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் அந்த ஆவணங்களை படித்துப்பார்க்க மேலதிக அவகாசம் கொடுக்க தெரிவுக்குழு மறுத்துவிட்டதாகவும் ஷிராணி பண்டாரநாயக்கவின் சார்பில் ஆஜராகும் சட்ட நிறுவனத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.

மேலும், இந்த விசாரணைகளின் போது தெரிவுக்குழு உறுப்பினர்கள் சிலர் இந்த விசாரணைகள் (20ஆம் பக்கம் பார்க்க)



## 130 டெங்கு நோயாளர்கள் நவம்பரில் இனங்காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 475 பேர் டெங்கு நோய்தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் கடந்த நவம்பர் மாதம் மட்டும் 130 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச வைத்திய சாலைகள் மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையே இதுவெனவும் இதைவிட தனியார் வைத்திய சாலைகளிலும் பல டெங்கு நோயாளர்கள் சிகிச்சைப் பெற்றிருக்கக் கூடும் எனவும் அந்த திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் டெங்கு நோயாளர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அரச வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்ட 684 பேரில் 475 (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அறிக்கை விவகாரம் ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் ஐக்கிய நாடுகள் செயற்பட்ட விதம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின நெசர்கி இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பு செயற்பட விதம் தொடர்பாக உள்ளக அறிக்கையொன்று அண்மையில் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் ஐக்கிய நாடுகளில் செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரியாலை காந்தி சிலை உடைப்பு சந்தேக நபர்கள் மூவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

அரியாலை காந்தி சிலை உடைப்பு வழக்கில் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் நிரபதாரிகள் எனக் கண்டு யாழ். நீதிமன்றம் குறித்த வழக்கினை தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த யூலை மாதம் 28ஆம் திகதியன்று இரவு 10.30 மணியளவில் அரியாலை காந்தி சனசமூக நிலையத்திற்கு முன்னுள்ள காந்தி சிலை இனந் தெரியாத நபர்களால் உடைத்து சேதம் விளைவிக்கப் பட்டிருந்தது.

குறித்த காந்தி சிலைக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் அப்பகுதியினைச் சேர்ந்த மூவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதோடு மேலும் இரு சந்தேக நபர்கள் தலைமறைவாகி உள்ளனர் என யாழ். நீதிமன்றில் யாழ். பொலிஸாரினால் கூறப்பட்டு வந்தது.

குறித்த 3 சந்தேக நபர்களுக்கும் விளக்க மறியல் விதித்த யாழ் நீதவான் ஏனைய இரு சந்தேக நபர்களையும் விரைவில்கைது செய்யுமாறு யாழ் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

எனினும் நீண்ட காலமாகியும் அவ்விருவரும் இதுவரை காலமும் பொலிஸாரினால் கைது செய்யப்படாமையோடு ஏற்கெனவே குற்றம் சாட்டப்பட்ட மூவர் மீதும் எதிர்த்தரப்பு சாட்சியவாதிகளின் சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரணான மற்றும் கண்கண்ட சாட்சியங்கள் இன்மையினாலும் குறித்த வழக்கில் பொலிஸார் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் யாழ். நீதவான் பெ. சிவகுமார் முன்னிலையில் தீர்ப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் மீது யாழ். பொலிஸாரினால் சுமத்தப்பட்ட குற்றம் சாட்சிகள் மூலம் சரியான முறையில் நிருபிக்கப்படாமையாலும் மேலும் வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்கு பொலிஸ் தரப்பு சரியான சாட்சியங்களினை முற்படுத்தாமையாலும் குறித்த வழக்கின் சந்தேக நபர்கள் மூவரினையும் நிரபராதி என கண்டு விடுதலை செய்து வழக்கினை தள்ளுபடி செய்வதாகவும் தீர்ப்பளித்தார்.

இதில் சந்தேக நபர்கள் மூவர் சார்பிலும் சட்டத்தரணி வி.ரி. சிவலிங்கம் ஆஜராகி தனது வாதங்களினை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் – 2012

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 07.12.2012 தொடக்கம் 20.12.2012 பி.ப. 4.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 21.12.2012 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 21.12.2012 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர் / செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம்(Vat, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | செங்குந்தா வீதி, கல்வியங்காடு | 5500.00 | 500.00 | M09/C10 |
| 02 | வாலையம்மன் வீதி, கல்வியங்காடு | 5700.00 | 500.00 | M09/C10 |
| 03 | திருநெல்வேலி பாற்பண்ணை 4ம் குறுக்கு வீதி. | 7640.00 | 500.00 | M09/C10 |
| 04 | பாரதிபுலம் குறுக்கு வீதி திருநெல்வேலி | 6810.00 | 500.00 | M09/C10 |
| 05 | தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி | 11100.00 | 500.00 | M08/C09 |
| 06 | காளி கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு | 15250.00 | 500.00 | M08/C09 |
| 07 | சென் செபஸ்தியார் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் | 4050.00 | 500.00 | M10/C10 |
| 08 | மத்திய சனசமூக நிலையம் (RDS) வீதி, கோண்டாவில் வடக்கு | 2950.00 | 500.00 | M10/C10 |
| 09 | காரைக்கால் வீதி, கோண்டாவில் | 14700.00 | 500.00 | M08/C09 |
| 10 | முனியப்பர் வீதி, கோண்டாவில் | 6850.00 | 500,00 | M09/C10 |
| 11 | முதலி கோவில் வீதி, கொக்குவில் மேற்கு | 5610.00 | 500,00 | M09/C10 |
| 12 | கலைமகள் வீதி, கொக்குவில் மேற்கு | 5000.00 | 500,00 | M10/C10 |
| 13 | சைவப்பாடசாலை வீதி, 1ம் குறுக்கு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு | 2230.00 | 500,00 | M10/C10 |
| 14 | பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் மேற்கு | 13170.00 | 500.00 | M08/C09 |
| 15 | அம்மன் வீதி. கொக்குவில் கிழக்கு | 1300.00 | 500.00 | M10/C10 |
| 16 | துறைமுக வீதி, அரியாலை கிழக்கு | 5920.00 | 500.00 | M09/C10 |
| 17 | சின்னத்தம்பி வீதி, அரியாலை | 6440.00 | 500.00 | M09/C10 |
| 18 | பொன்னையா 4ம், 2ம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை | 6070.00 | 500.00 | M09/C10 |
| 19 | சம்பியன் வீதி, குறுக்கு ஒழுங்கை, கொக்குவில் | 4920.00 | 500.00 | M10/C10 |
| 20 | பலாலி வீதி, குறுக்கு ஒழுங்கை, திருநெல்வேலி | 2250.00 | 500.00 | M10/C10 |
| 21 | உடையார் ஒழுங்கை, கொக்குவில் | 4950.00 | 500.00 | M10/C10 |
| 22 | காரைக்கால் எல்லைச்சுவர், கேற் அமைத்தல் – கோண்டாவில் | 4300.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

(C-1696)

திரு. ப. வசந்தகுமார்,
தவிசாளர்.

# துரை ஆரோக்கியதாசன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் துரை ஆரோக்கியதாசன் கடந்த 4-ம் திகதி காலமானார்.

சமூக, சமய சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த துரை ஆரோக்கியதாசன் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இல. 60, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (ந)

# கசூரினாவில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் மது போதையில் அட்டகாசம் செய்த இரு இளைஞர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மதுபோதையில் நின்ற அவர்கள் தமது உடைகளை கழற்றி அட்டகாசம் புரிந்ததாகவும், இது குறித்து அப்பகுதியில் நின்ற பெண்களின் முறைப்பாட்டையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இவரும் பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன், நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-11)






# பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

(எ-24)

# கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்டச் செயலக உள்ளக கணக்காய்வுக் கிளையில் பிரதம பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி றெஜினா சாள்ஸ் மத்தியூஸ் அவர்களின் கணவர்

அமரர்
## சாள்ஸ் மத்தியூஸ்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதம கணக்காளர், கணக்காளர், நிதிக்கிளை
களஞ்சிய நலன்புரிக் கிளை மற்றும்
உள்ளகக் கணக்காய்வுக் கிளை
உத்தியோகத்தர்களும் பணியாளர்களும்

(1119)


பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

50% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 021 222 2829


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 11.15 மணி முதல் 1.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறைச் செல்வன்
**N.R.S. நரேந்திரன்**
அவர்களுக்கும்



எமது புதல்வி
திருநிறைச் செல்வி
**K. கலையமுதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்" திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

தவில்மேதை
திரு. திருமதி N.R. சின்னராசா
குடும்பத்தினர்.

திரு. திருமதி கிருஸ்ணபிள்ளை
குடும்பத்தினர். (வேலுப்பிள்ளை)
23, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இருவீட்டார் அழைப்பு

(1120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நாம் படைப்பது தான் சொர்க்கமும் நகரமும்

கோயில் ஒன்றில் பெரியவர் ஒருவர் ஆன்மீகச் சொற்பொழிவொன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அவரது சொற்பொழிவில் கடவுள், சொர்க்கம், மனிதன் ஆகியவை பற்றி விபரமாகப் பேசினார். அனைவரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் ஒரு தத்துவஞானியும் அமர்ந்திருந்தார். அவர் சொற்பொழிவாளருடைய நண்பர்.

சொற்பொழிவாளர் சொற்பொழிவை நிறைவு செய்ததும் அந்தப் பெரியாரிடம் விரைந்து, ''எப்படி இருந்தது என் பேச்சு?'' என்று வினவினார்.

அதற்கு தத்துவஞானி, ''நீங்கள் பேசியவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது'' என்றார்.

"என்ன முரண்பாடு?" என இவர் கேட்டார்.

"கடவுளை நம்புபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் என்று முதலில் நீங்கள் கூறினீர்கள். அதேநேரம் நல்லவனாக வாழ்பவன் சொர்க்கத்திற்குப் போவான் என்றும் சொன்னீர்கள்" என்றார்.

"ஆமாம்! அதிலே என்ன முரண்பாடு கண்டீர்கள்?" என்றார் பெரியவர்.

தத்துவஞானி அமைதியாக, ''இந்த உலகத்தில் ஒருவன் எல்லாத் தப்பும் செய்து கொண்டே, கடவுளை நம்பினான் என்றால் அவன் சொர்க்கத்திற்குப் போவானா? அல்லது தவறு ஏதும் செய்யாமல் ஒழுங்காக வாழ்ந்து இறைவனை நம்பாமல் இருக்கிறவன் நரகத்திற்குப் போய் விடுவானா?

"கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒரு நல்லவன் என்ன செய்வான்? எங்கே போவான்? இவ்வுலகில் கடவுள் நம்பிக்கையோடு வாழ்வது முக்கியமா? அல்லது நல்லவனாக வாழ்வது முக்கியமா?'' என்று கேட்டார்.

இவை அனைத்தையும் கேட்டதும் அந்தப் பெரியவர் குழப்பம் அடைந்தார்.

தத்துவஞானி கூறியதும் நியாயம் தானே; கடவுளை நம்புபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் என்றால், அமைதியாக கடவுகளை நம்பிக் கொண்டு, இந்த உலகில் அனைத்து விதமான பிழைகளையும் செய்து கொண்டே இருந்து விடலாமா?

பேச்சாளர் குழப்பத்துடனேயே வீட்டிற்குச் சென்று தூங்கிவிட்டார்.

அவர் தூங்கிய போது அவருக்கு ஒரு கனவு வந்தது.

கனவில் அவர் ஒரு புகையிரதத்தில் சென்று கொண்டிருந்தார். எதிரில் அமர்ந்திருப்பவரைப் பார்த்து ''நாம் இப்போது எங்கே போகிறோம்?" என்று கேட்டார்.

''சொர்க்கத்திற்குப் போகிறோம்?'' என்று எதிரில் இருந்தவர் பதிலளித்தார்.

புகையிரதம் ஓரிடத்தில் நின்றது. அந்த இடம்தான் சொர்க்கம் என்று நினைத்து இவர் இறங்கினார். ''இங்கே கௌதம புத்தர் இருப்பார்; சோக்ரடீஸ் இருப்பார்; அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இது'' என்று நினைத்து அவர் சுற்றிலும் பார்த்தார்.

ஒரே பாலைவனம் போல் காட்சியளித்தது. பச்சை பசுமைக்கே இடம் இல்லை. எங்கு பார்த்தாலும் பொட்டல் காடு. ஒரு சில இடங்களில் எலும்பும் தோலுமாக சிலர் அமர்ந்திருந்து தியானம் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் போய் இவர் "புத்தர், சோக்ரடீஸ் இவர்கள் எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?" என்று ஆவலுடன் வினவினார்.

"அப்படி யாரும் இங்கே இல்லையே..." என்று அவர்கள் பதிலளிக்க, இவர் ஓடி வந்து புகையிரதம் நின்ற இடத்தை அடைந்தார்.

நரகத்திற்கு செல்வதற்கு ஒரு புகையிரதம் ஆயத்த நிலையில் நின்றது. இதில் அவர் ஏறி அமர்ந்து கொண்டார்.

புகையிரதம் வேகமாகப் புறப்பட்டது. எங்கு பார்த்தாலும் நீரோடைகள், நீர் நிலைகள், நந்தவனங்கள், மலர்கள், பறவைகள் கூட்டம் தென்பட்டன.

அங்கே இருந்தவர்கள் ஒரே ஆனந்தக்களிப்பில் திளைத்திருந்தார்கள்.

சொர்க்கத்தில் காணாத சிலர், இங்கு நரகத்தில் இருப்பதைக் கண்டார்.

இவை அனைத்தையும் பார்த்த இவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. "இது என்ன நரகம் தானா?'' என்று யோசித்துக் கொண்டு புகையிரதத்தை விட்டு இறங்கினார்.

அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த போது இது நரகம்தான் என்று அமைதியாகப் பதில் வந்தது.

"எனக்கொரு சந்தேகம், புத்தரும் சோக்ரடீசும் லாவோட்சுவும்- இவர்களைப் போன்ற இன்னும் பலரும் (உருவக்) கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் எல்லாம் இங்கே எப்படி வந்தார்கள் என்பதுதான் எனது சந்தேகம்'' என்று தன் குழப்பத்தை அவர்களிடம் கூறினார்.

அதற்கு அங்கிருந்தவர்கள் "ஐயா இப்போது இங்கே நீங்கள் பார்க்கும் அனைத்து விடயங்களும் மேற்கூறியவர்கள் போன்ற ஏனைய மகான்களும் இங்கே வர ஆரம்பித்த பின்னர்தான் உண்டாக ஆரம்பித்தன.

''இந்தப் பிரதேசத்தையே அவர்கள் மாற்றி விட்டார்கள். இங்கே இருப்பவர்கள் யாரும் சொர்க்கத்திற்குச் செல்வதற்கு விரும்புவதில்லை'' என்று கூறினார்கள்.

இந்தக் கதையின்மூலம் நாம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது... நல்லவர்கள், எங்கே இருக்கிறார்களோ, அந்த இடம் சாதாரணமான இடமாக இருந்தாலும், ஏன் நரகமாக இருந்தாலும் கூட அதுவே சொர்க்கமாக மாறி விடுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவும் ஆய்வரங்கும்

வடமாகாணத்தமிழ் இலக்கியத்தின் செல்நெறிகள் எனும் தலைப்பிலான தமிழ் இலக்கியப் பெருவிழா ஆய்வரங்கு நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக் கம் ஒரே நேர இரு அமர்வுகளாக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை வடமாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைப்பார்.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கவிஞர் முருகையன் அரங்கில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள அமர்வில் கடந்த 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகிய **சமகால கலை இலக்கியத்தின் பண்பாட்டுக் கோலங்கள்** நூல் வெளியீடு நடைபெறும்.

இந்நிகழ்வில் **யாழ்.மாவட்டத்தில் 1950 வரையான கவிதைப் போக்குகள்** எனும் தலைப்பில் தென். கிழக்குப் பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன், **யாழ்.மாவட்டத்தின் 1950 இற்கு பிற்பட்ட கவிதைப் போக்குகள்** எனும் தலைப்பில் கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலய ஆசிரியர் சி.ரமேஸ், **யாழ். மாவட்டத்தின் மொழிபெயர்ப்பு முயற்சிகள்** எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், **கிளி. மாவட்டத்தின் கவிதைப் போக்குகள்** எனும் தலைப்பில் த.அஜந்தகுமார், **வவுனியா மாவட்டத்தின் கவிதை முயற்சிகள்** எனும் தலைப்பில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பொ.சத்தியநாதன் ஆகியோர் ஆய்வாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு தனிநாயகம் அடிகளார் அரங்கில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் மற்றைய அமர்வு நடைபெறும்.

இதில் **வவுனியா மாவட்டத்தின் ஆவண, குறும்படத் தயாரிப்புக் கள்** எனும் தலைப்பில் வவுனியா கலாநிதி நா.தர்மராஜா (அகளங்கன்), **யாழ். மாவட்டத்தின் இதழியல் முயற்சிகள்** எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஊடகவியற்றுறை விரிவுரையாளர் செல்வி த.கிருத்திகா, **யாழ்.மாவட்ட இலக்கியங்களின் பின் நவீனத்துவத்தின் தாக்கம்** எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி, **யாழ். மாவட்டத்தின் திறனாய்வு முயற்சிகள்** எனும் தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பதில் தலைவர் பேராசிரியர் செ.யோகராஜா, யாழ். மாவட்டத்தின் நாட்டார் மாவட்டத்தில் வாய்மொழி இலக்கியம் எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் ஆய்வாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ப.றுதீன் புலவர் அரங்கில் எழுத்தாளர் க.நடேசு (தெணியான்) தலைமையில் முதலாவது அமர்வு நடைபெறும்.

இதில் **கிளிநொச்சி மாவட்டத்தின் புனைகதை இலக்கியப் போக்குகள்** எனும் தலைப்பில் கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் பெருமாள் கணேசன், **முல்லைத்தீவு மாவட்டத்தின் புனைகதை இலக்கியப்போக்குகள்** எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் ம.இரகுநாதன், **வவுனியா மாவட்டத்தின் புனைகதை வளர்ச்சி** எனும் தலைப்பில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ந.பார்த்தீபன், **யாழ். மாவட்டத்தின் சிறுகதை இலக்கியப் போக்குகள்** எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், **யாழ். மாவட்டத்தின் நாவல் இலக்கிய வளர்ச்சி** எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம்காலை 9 மணிக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கில் கிழக்கு பல்கலைக்கழக மொழி பண்பாட்டுதத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் தலைமையில் மற்றைய அமர்வு நடைபெறவுள்ளது.

இதில் **மன்னார் மாவட்டத்தின் மரபு வழிக்கூத்து நாடகம்** எனும் தலைப்பில் மட்/ விபுலானந்தா வித்தியாலய அதிபர் சுந்தரம், பாண்டியன், **மன்னார் மாவட்டத்தின் இலக்கிய முயற்சிகள்** எனும் தலைப்பில் மன்னார் சமூகத் தொடர்பாடல் மைய அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார், **முல்லைத்தீவு மாவட்டத்தின் நாட்டார் கலைகள்** எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன், **வவுனியா மாவட்டத்தின் நாடகப் போக்குகள்** எனும் தலைப்பில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் து.இளங்குமரன், யாழ்.மாவட்டத்தின் நாடகப் போக்குகள் எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் ஆகியோர் ஆய்வாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-3-9-24)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 130 | 120-160 | 140 |
| பச்சைமிளகாய் | 230 | 200 | 250 |
| தக்காளி | 90 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 70 | 80 |
| கரட் | 100 | 80 | 160 |
| பூசணி | 40 | 60 | 60 |
| புடோல் | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 60-80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 155 | 160 |
| பெரிய வெங்காயம் | 160 | 110 | 120 |
| பாகற்காய் | 100 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 100 | 160 | 80 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 |
| பீற்றூட் | 90 | 100 | 140 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | 350 | -- |
| போஞ்சி | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 70 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 30 | 30-35 |

## இராசி பலன்

***07.12.2012***
***(கார்த்திகை 22, வெள்ளிக்கிழமை)***
***சூரிய உதயம் காலை 6.17 மணிக்கு***
***நவமி பின்னிரவு 3.05 மணிவரை***
***உத்தரம் பின்னிரவு 3.10 மணிவரை***
***இராகுகாலம் 10.47-12.17 மணிவரை***
***சுபநேரம் 6.17-7.47 மணிவரை***
***மெய்ப்பொருள் நாயனார் குருபூசை.***

**மேடம்** கந்தன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**இடபம்** காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும், கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழில் நன்மையுண்டு.

**மிதுனம்** தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வாகன சுகமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கடகம்** தொழிலில் எதிர்பார்த்த நன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உடன் பிறப்புக்கள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முன்வருவர்.

**சிங்கம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், புண்ணிய கருமங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய அனுகூலங்கள் ஏற்படும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**தனுசு** உறவினர் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், தொழில் வளர்ச்சி கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், ஆலய வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், இனசன வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கு (வகை 1-ஏபி) அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இப்பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவியின் விண்ணப்ப தகைமைகளாக இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III, இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஏபி சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இத்தரத்தைச் சேர்ந்த விண்ணப்பங்களிலிருந்து தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-I கவனத்தில் கொள்ளப்படும். தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை நியமனம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (அ)



நன்றி: ஐலன்ட்

# 250 மில்லியன் ரூபா செலவில் யாழ்.நகரில் விடுதிக்கட்டடம்

## நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட முத்தமிழ் சதுக்கம் பகுதியில் 250 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள அரச ஊழியர்களுக்கான தங்குமிட விடுதிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமால் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண பணிப்பாளர் நா.இராஜநாயகம், யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணத்தின் பணிப்பாளர் இராஜநாயகம் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக யாழ்.மாநகர சபை எல்லைக்குள் ஒல்லாந்தர் காலத்துக்குரிய யாழ்ப்பாணம் கோட்டையை சுற்றியுள்ள பகுதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.

யுத்த காலத்தில் இந்தப் பகுதிகளில் ஏற்பட்ட பாரிய குழிகள் மண்ணிடப்பட்டு நிரப்பப்பட்டுள்ளதோடு அழகுபடுத்தப்பட்டும் உள்ளது. இதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுமார் 1.7 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர கோட்டையை அண்டிய கடற்கரை பகுதியை அழகுபடுத்தும் முகமாக மரம் நடப்பட்டு வருவதோடு சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு கடற்கரைப் பூங்கா அமைக்கப்பட்டும் வருகிறது.

சிறுவர் பூங்கா மற்றும் இருக்கைகள் என்பனவும் 12 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஐந்து குளங்கள் புனரமைப்பும் செய்யப்பட்டு வருகிறது. இதில் குறிப்பாக புல்லுக்குளத்தை ஆழமாக்கும் பணி 1.7 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கன்னாதிட்டிக்குளம், ஆரியகுளம், தேவரிக்குளம், வண்ணான்குளம் என்பனவும் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. மேலும் புல்லுக்குளத்திற்கு அருகாமையில் தூர இடத்திலிருந்து தனியார் பேருந்துகள் தரித்து நிற்பதற்கான தரிப்பிடம் ஒன்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் முத்தமிழ் சதுக்கம் என்னும் பகுதியில் அரச ஊழியர்களுக்கான விடுதிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சுமார் 250 மில்லியன் ரூபா இந்த விடுதிக் கட்டிடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 150 படுக்கை அறைகளைக் கொண்டதாக அமையும் இவ்விடுதியில் குறைந்த கட்டணத்துடன் அரச ஊழியர்கள் தங்கிச் செல்ல முடியும் எனவும் தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தில் தனியார் விடுதிகளில் அரச ஊழியர்கள் தங்கிச் செல்லும்போது அதிகளவான பணத்தினை இழக்க நேரிடுவதனால் அரசாங்கம் இந்த விடுதிக் கட்டடத்தை அமைக்க முன் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களிலிருந்து தமது தொழில் நிமித்தம் யாழ்.மாவட்டத்திற்கு வரும் அரச ஊழியர்கள் இங்குள்ள தனியார் விடுதிகளில் அதிக பணம் செலுத்தி தங்கியிருந்து சென்றுள்ளனர். இதனை தவிர்ப்பதற்காகவே இந்த விடுதிக் கட்டடம் அமைக்கப்படுகிறது என்றார்.

இதன்போது முத்தமிழ் சதுக்கம் என்னும் பகுதியில் இதுவரை காலமும் வசித்து வந்த மக்கள் எங்கே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர்கள் 300 மீற்றருக்கு அப்பால் உள்ள காணியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

அத்தோடு இந்த முத்தமிழ் சதுக்கம் என்னும் பகுதிக் காணி அரச காணி எனவும் 28 குடும்பங்கள் தற்காலிக குடிசைகளை அமைத்து இங்கு வாழ்ந்து வந்தனர் எனவும் தெரிவித்தார். இதன்போது மாற்றிடமாக வழங்கப்பட்ட காணிக்கு சட்ட ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதா? எனவும் கட்டாயப்படுத்தி அம்மக்கள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டதாக குற்றம் சாட்டப்படுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டபோது,

சட்ட ஆவணங்களை வழங்குவது தொடர்பில் பிரதேச செயலரிடம் தான் கேட்க வேண்டும் எனக்கூறியவாறு அவ்விடத்தை விட்டு சென்று விட்டார். இது தொடர்பாக யாழ்.மாநகரசபை முதல்வரிடம் கேட்டபோது, இந்தக் காணி அரச காணி. 8 மாதங்களுக்கு முன்புதான் இங்கு வந்து அந்த மக்கள் குடியேறினார்கள். அத்தோடு இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் இவ்விடத்தை விட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டனர் எனக் கூறியவாறு அவரும் அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டார். (அ-4-6)

## நிர்வாகிகள் தெரிவு

(நல்லூர்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய மாதர் மகளிர் முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய உத்தியோகத்தர் தெரிவும் பாரதி மன்ற சனசமூக நிலையத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக திருமதி மேரிவின்சிலா, உப தலைவராக திருமதி கு.ரேணுகா, செயலாளராக ராஜ்குமார் ஜெயசித்திரா, உப செயலாளராக க.சுமதி, பொருளாளராக அ.மரீனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 9 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-134)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(கரவெட்டி)

கரவெட்டி அரசடிச் சந்தியில் வீதியால் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மீது இளைஞர் குழு பொல்லால் தாக்கியதில் குடும்பஸ்தர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் கரவெட்டி அரசடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவது,

குறித்த குடும்பஸ்தர் சம்பவதினம் அல்வாயில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து பணி முடிந்து வீடு சென்று கொண்டிருந்த வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. இச்சம்பவத்தில் [illegible] ஒழுங்கையைச் சேர்ந்த செல்வம் செல்வநாதன் [illegible] உள்ளானவர் ஆவார். இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24)




## செயலமர்வுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 3 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்பாட்டு செயலமர்வுகள் வரணி ஆசிரிய மத்தியவள நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நாளை சனிக்கிழமையும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமையும் அழகியல் பாட செயற்பாட்டு செயலமர்வு நடைபெறவுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமர் ரட்ணசிறி இந்நாள் பிரதமராகலாம்

(கொழும்பு)



பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க மீளவும் பிரதமராக நியமிக்கப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய பிரதமர் டி.எம். ஜயரட்னவின் உடல் நலனைக் கருத்திற் கொண்டு இவ்வாறு பதவியில் மாற்றம் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவிற்கான பாதுகாப்பு கடந்த சில தினங்களாக பலப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. தற்போதைய பிரதமராக பதவியிலுள்ளவர் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் பிரதமர் பதவியையும் இராஜினாமா செய்வார் எனவும் இது தொடர்பில் அவர் வெகுவிரைவில் ஜனாதிபதியிடம் அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஏற்படும் வெற்றிடத்திற்கு பிரதமரின் புதல்வர் அனுராத ஜயரட்ன நியமிக்கப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

அரச, அரச சார்பற்ற சகல பாடசாலைகளும் இவ்வாண்டின் 3 ஆம் தவணை விடுமுறைக்காக இன்று வெள்ளிக்கிழமையுடன் மூடப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி புதன் கிழமை பாடசாலைகள் அனைத்தும் புதிய கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படவுள்ளன. (அ-2)

# இரவு 7 மணிக்கு பின் வீதிகளில் கூடுவோர் கைது செய்யப்படுவர்

## கோப்பாய் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)



இரவு 7 மணிக்குப் பின்னர் வீதிகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள் மற்றும் மதுப்பிரியர்கள் கைது செய்யப்படுவார்கள் என கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக ஜெயக்கொடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குள் கடந்த காலங்களில் பல குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆனால், பொலிஸார் மீதுதான் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் எதிர்காலத்தில் அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அமையும். அத்தோடு கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இரவு 7 மணிக்குப் பின்னர் வீதிகளில் தேவையற்று கூடும் இளைஞர் குழுக்கள் விரட்டியடிக்கப்படுவர். அத்தோடு கைது செய்யப்படவும் வாய்ப்புள்ளது. இது தவிர மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகமாகவுள்ளதாக பொதுமக்களினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்தோடு வீதிகளில் மது அருந்துபவர்கள் கைது செய்யப்படுவார்கள். மேலும் கஞ்சா போன்ற சட்டவிரோதப் பொருட்களை விற்பனை செய்பவர்களையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவோம். கடந்த காலங்களிலும் பலர் அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் திருமணம் செய்வதாகக் கூறி பெண்களை ஏமாற்றுபவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்ததோடு காதலித்து பெண்ணொருவரை ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட நபரை அந்தப் பெண்ணுடன் நேற்று முன்தினம் பதிவுத் திருமணம் செய்து வைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் எல்லோரும் சந்தோசமாக இருக்க வேண்டும். அதற்கு எதிராக சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, வழமை போன்று வீதிகளில் தேவையற்று இரவு வேளைகளில் இளைஞர்கள் கூட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மருத்துவ ஆய்வுகூட பணியாளர்கள் நேற்று நான்கு மணிநேர பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ ஆய்வுகூட தொழிற்சங்க பணியாளர்கள் நேற்றைய தினம் 4 மணிநேர பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் யாழ். போதனாவில் மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள வைத்தியசாலைகளிலும் இடம்பெற்றுள்ளது.

மதியம் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெற்ற இப் பணிப்புறக்கணிப்பு பல கோரிக்கைகளினை முன்னிலைப்படுத்தியிருந்தது.

அக் கோரிக்கைகளில் முக்கிய 4 கோரிக்கைகள் வருமாறு, பல்கலைக்கழகங்களில் இணை மருத்துவ பட்டம் பெற்ற மாணவர்கள் 2 வருடங்களாகியும் எமது சேவையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அவர்களை உள்வாங்கக் கூடிய நடவடிக்கையினை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுக்கான கல்வித்தகுதி கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

சிலதகுதியற்றநிறுவனங்கள்க.பொ.த/உயர்தர விஞ்ஞானப் பாடப்பிரிவில் இரு பாடம் சித்தியெய்தியவர்களையும் இப்பட்டப்படிப்பிற்குள் உள்வாங்கி தகுதியற்ற ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குகின்றனர்.

இது நிறுத்தப்படல் வேண்டும். தகுதியற்றவர்கள் மருத்துவ ஆய்வுகூடத்தினை ஆரம்பித்து அவற்றுள் தகுதியற்றவர்களை உள்வாங்கி இச்சேவையினை மட்டுப்படுத்துகின்றனர்.

இவை தடுக்கப்படல் வேண்டும் எனப் பலகோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். மேலும் இப் போராட்டத்தின் போது உயிர்காப்பு நடவடிக்கையினை நாம் நோயாளர்நலன் கருதி மேற்கொண்டதாகவும் யாழ். போதனாவின் மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்ப பணியாளர்கள் தெரிவித்தனர். இப்பணிப் புறக்கணிப்பினால் இரத்த பரிசோதனை, சிறுநீர்ப்பரிசோதனை உட்பட சில சிறிய பரிசோதனைக்காக நோயாளர் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)

## சேவை நலன் பாராட்டு

07.12.2012

எமது பாடசாலை ஆசிரியர்

கந்தசாமி ராதாகிருஷ்ணன் B.A.

(இலங்கை வேந்தன்)



ஆரம்ப பாடசாலை - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
உயர்கல்வி - யாழ்.இந்துக் கல்லூரி
பட்டப்படிப்பு - யாழ்.பல்கலைக்கழகம்

26.03.1990 : நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
04.04.1994 : யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்

பாடசாலைச் சமூகம்
யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்

(1094)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5' 5"<br>கி.பா: 21<br>தொழில்/ தகைமை :A/L AAT (Executive)<br>தொ. இல : B -439 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>உயரம்: 5'6"<br>கி.பா: 14, 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BSc (Hons), Cima Part, MBA Management (UK. Student Visa, Work Permit)<br>தொ. இல : G - 046 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>உயரம்: 5' 11"<br>கி.பா : 15<br>தொழில்/ தகைமை : Computer Science மருந்துக் கம்பனி Director<br>தொ. இல : B -432 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'3"<br>கி.பா: 33.5<br>தொழில்/ தகைமை: A/L, HNDA உயர் தொழில்நுட்பக் கல்லூரி English Medium<br>தொ. இல : G - 047 |
| பிறப்பு: 1963 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 21<br>தொழில்/ தகைமை:A/L.(விவசாயம்)<br>தொ. இல : B - 433 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>உயரம்: 5' 8"<br>கி.பா: 71, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BA (UK) CIMA 4 Years, கணக்காளர்<br>தொ. இல : G - 048 |
| பிறப்பு: 1968 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>உயரம்: 5' 4"<br>கி.பா: 16.5, 12 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BA,MA நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ. இல : B - 434 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>உயரம்: 5'5"<br>கி.பா: 62, 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L கலைப்பிரிவு, Computer Course<br>தொ. இல : G -049 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறை காலத்திலும் தெரிவுக்குழு கூடவேண்டும்

## ஆளும் தரப்பு எம்.பிக்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை விசாரிக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழு வருடத்தின் இறுதி விடுமுறை காலத்திலும் கூட்ட வேண்டும் என தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச் சாட்டுகளுக்கான ஆவணங்களை தயாரிப் பதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு நேற்று முன்தினம் கூடியது.

நாளை சனிக்கிழமை நடைபெறும் வரவு-செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்புடன் நாடா ளுமன்ற கூட்டத்தொடர் நிறைவடைகின்றது.

இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டத் தொடர் நிறைவடைந்தாலும் அதற்கு பின்னர் குறைந்தபட்சம் 10 நாட்களுக்காவது நாடா ளுமன்ற தெரிவுக்குழு கூட வேண்டும் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆயினும் வரவு-செலவுத்திட்ட விவாதம் நிறைவடைந்ததன் பின்னர் உறுப்பினர்களுக் கும் பணியாளர்களுக்கும் ஒருமாதம் விடு முறை வழங்குவது நாடாளுமன்ற பாரம் பரியம். இந்த வருடம் இதற்கு விதிவிலக்காக அமையாது என தெரிவுக்குழுவிலுள்ள எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நால்வரும் தெரிவித்த னர்.

எனினும் , நாடாளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் 10, 11, 12 ஆம் திகதிகளிலாவது கூடி பிரதம நீதியரசருக்கு எதிரான நடவடிக்கை யை விரைவுபடுத்த வேண்டும் என ஆளும் கட்சி யினர் வலியுறுத்தியுள்ளனர். (அ-2)

## ஊழல் அற்ற நாடுகள்

# பட்டியலில் இலங்கை 79 ஆவது இடத்தில்

ஊழல் இல்லாத நாடுகளின் பட்டியலில் இலங்கை 79 ஆவது இடத்தில் இடம்பிடித் துள்ளது.

உலகில் ஊழல் நிறைந்த நாடுகள் தர வரிசை பட்டியலை டிரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல் என்ற அமைப்பு வெளியிட்டுள் ளது.இவ்வமைப்பின் ஆய்வின்படி ஊழல் இல்லாத நாடாக டென்மார்க் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதிக ஊழல் நிறைந்த நாடுகளாக மியன் மார்,சூடான்,ஆப்கானிஸ்தான் , சோமாலியா, வடகொரியா ஆகிய நாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இத்தரவரிசையில் இந்தியா 94 ஆவது இடத்திலும் சீனா 80 ஆவது இடத்திலும் உள்ளன. இந்த ஆண்டு பட்டியலில் 176 நாடுகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (அ-2)

# கழுதைக்குரிய சுதந்திரத்தை ஊடகங்கள் எதிர்பார்க்கின்றன

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)



ஊடக சுதந்திரம் என்ற பெயரில் காட்டுக் கழுதைக்குரிய சுதந்திரத்தை வழங்க முடியாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் சுதந்திரத்தையே ஊடகங்கள் எதிர் பார்க்கின்றன. அவ்வாறு எதிர்பார்க்கும் ஊடகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் சந்தேகம் எழுகின்றன. ஊடக சுதந்திரம் என்ற போதிலும் அதற்கும் ஓர் எல்லை யுண்டு. நாட்டுக்கு தீங்கு ஏற்படக் கூடிய விடயங்களை செய்ய அனுமதிக்க முடியாது. 10 தொடக்கம் 12 வாரஇறுதி பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. இவற்றில் அரச ஊடகங்களைத் தவிர்ந்த ஏனையவற்றில் முக்கிய அரசியல்வாதிகள் கடுமையாக விமர்சனம் செய்யப்படுகின்றனர். இவ்வாறான ஓர் நிலை மையிலேயே ஊடகங்கள் சுதந்திரம் பற்றி பேசி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஊடகங்கள் சுதந்திரமான முறையில் இயங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவாதங்களில் கலந்து கொண்டபோது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்கு செல்ல எல்லா ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி கிடையாது. இதனால் உண்மை நிலைமை வெளிப்படுத்தப்படுவதில்லை. சில ஊடகங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அழுத்தங்களை எதிர்நோக்கியே ஊடகவியலாளர்கள் தமது பணிகளை மேற்கொள்கின்றனர்.

ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்பட அனுமதியளிக்க வேண்டும் என கோரியிருந்ததாக தெரிய வருகின்றது. (அ-2)

# முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்; சவால் விட்ட கஞ்சா வியாபாரி கைது

(கொழும்பு)

தனியார் வானொலி நிகழ்வொன்றில் பங்குபற்றிய நபரொருவர் தான் பிரதான கஞ்சா வியாபாரி என தெரிவித்ததுடன் முடிந் தால் கைது செய்து பாருங்கள் என பொலி ஸாருக்கு சவால் விட்ட சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இரத்தினபுரியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு பொலிஸாருக்கு சவால் விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸார் தீவிர விசார ணைகளை மேற்கொண்டதுடன் குறித்த நபரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கஞ்சா வியாபாரிக்கு அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸ் அதிகா ரிகளுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாக வும் இதுவே இவர் வானொலி நிகழ்ச்சி மூலம் சவால் விடக் காரணமெனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# பருத்தித்துறை நகராட்சி மன்றம் அறிவித்தல்கள்

## ஆதனவரி அறிவித்தல்கள் 2013

ஆதன மதிப்பீட்டிற்கமைவாக 2012ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த ஆதன வரித் தொகைகளே 2013 ஆம் ஆண்டிற்கும் அவ் ஆதனங்களுக்கு செலுத்தற்படற்பாலானது என்றும் இவற்றிற்குரிய ஆதனவரி அறிவித்தல் படிவங்கள் தனித்தனியாக விநியோகிக் கப்பட்டு வருகின்றனவெனவும் வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது. இவ் ஆதனவரி அறிவித்தல் படிவங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம். ஆட்சேபனைகள் இருப்பின் இவ்வறிவித்தல் கிடைத்து ஒருமாதகாலத் திற்குள் நகரசபை அலுவலகத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கவேண்டும். இவ்வாதன வரித் தொகைகள் 2013ஆம் ஆண்டு மார்ச் 31,யூன் 30,செப்ரெம்பர் 30,டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் காலாண்டுகளுக்கு ஒருதடவை செலுத்தப்படவேண்டும். 2013 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதனவரியையும் செலுத்தினால் 10%வரிக் கழிவும், ஒருகாலாண்டிற் குரிய வரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தினால் 5%வரிக்கழிவும் வழங்கப் படும். குறித்தகாலாண்டினுள் ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் அதற்காக முறையே தரிசு நிலம் வதிவிடங்களுக்கு 15%மும் வியாபார நிலையங்களுக்கு 20%மும் பற்றாணைச் செலவாக (தணடம்) அறவிடப்படும்.

மேலும் உரியகாலங்களில் அக்காலப்பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் குடியிருப்பாளரின் பொருட்கள் நடுக்கட்டல் செய்யப்படும் எனவும்,நகரசபைக் கட்டளைச் சட்டத் தின் 255ஆம் அத்தியாயம் 170ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 252 ஆம் அத்தி யாயமான மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 243 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகைக்காரர் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்தி அத்தொகையை வாடகையி லிருந்து குறைத்துக் கொள்ளலாம். அத்துடன் சிவப்புப் பத்திரஅறிவித்தல் அனுப்பப்பட்ட ஆதனச் சொந்தக்காரர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் ஆதனவரி நிலுவைத் தொகை முழுவதையும் ஒரேதடவையில் செலுத்துதல் வேண்டும். பகுதிபகுதியாகச் செலுத்துதல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பது குடியிருப்பாளர்களின் கவனத்திற்கு அறியத்தரப்படுகின்றது.

புதிதாக காணி கொள்வனவு செய்தவர்களும், நகராட்சிமன்ற ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாதஆதனச் சொந்தக்காரர்களும் தமக்குரிய ஆதனங்களை நகராட்சிமன்ற ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபை அலு வலகத்தில் சமர்ப்பித்துப் பெயர் மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இது தொடர்பான மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் அலுவலகத் துடன் தொடர்புகொள்ளவும்.

## 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கநகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

இந்நகரசபை எல்லைக்குட்பட்டோர் தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள் மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள் மதில்கள் அமைக் கப்படல்வேண்டும். புதியகட்டடம் அமைப்பதற்கு அனுமதிபெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்திகட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.

அத்துடன் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டதும் நகரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். அனுமதி பெறாது அமைக்கப் படும் கட்டடங்கள், மதில்கள் தொடர்பாக ஆதனச் சொந்தக்காரர் மீது குறித்த சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## காணி உபபிரிவிடுகை

ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு காணித் துண்டினைக் கொள்வனவு செய்ய நேரிடும் சந்தர்ப்பத்தில் பிரிவிடல் (அனுமதி வழங்கப்பட்ட) நிலஅளவைப் படத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உறுதி பெயர்மாற்ற நடவடிக்கைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு காணி பிரிக்கப்படும்போது நகரஅபிவிருத்தி அதிகாரசபைச் சட்ட விதிமுறைகளுக்கமைவாக காணி பிரிவிடப்படுதல் வேண்டும். இவ்வாறு பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு துண்டுகளும் 150 சதுரமீற்றர் (அண்ணளவாக 10.7 குளி) க்கு குறையாது பிரிக்கப்படல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

## சூழல் பாதுகாப்பு உரிமம்

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ளவேண்டியசெயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'இ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ளவேண்டும். மேற்படி தொழிலை/வியாபாரத்தினை நடத்துபவர்கள் 'அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்ப படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து உரியகட்டணத்தைச் செலுத்தி இவ்வுரிமத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வுரிமம் பெறாது மேற்படி தொழில்கள்/ வியாபாரம் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியத் தரப்படுகின்றது.

## வியாபார உரிமம் 2013

சகலவியாபாரம்/தொழில்நிலையங்களும் தங்கள் வியாபாரத்திற்கான தொழில் மீதானவரி, வியாபார உரிமம், வியாபார வரி என்பன கோரும் விண்ணப்பப்படிவத்தினை நகரசபை அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிமத்தினை/ பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். 31.03.2013ஆம் திகதிக்குமுன் உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளத் தவறுவோர் மீதுசட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியத் தரப்படுகின்றது.

## வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம் 2013

இந்நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்டோர் தமதுவளர்ப்பு நாய்களுக்கும் துவிச்சக்கரவண்டிக ளுக்கும் 2013ஆம் ஆண்டுக்குரிய உரிமத்தை 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வலு வலகத்தில் உரியகட்டணங்களைச் செலுத்தி பெறுக் கொள்ளுமாறு அறியத் தரப்படுகின்றது.

## விளம்பரப் பலகைகளுக்கான கட்டணம் 2013

நகரசபைஎல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு ஒரு சதுரஅடிக்கு ரூபா 50/- வீதமும்,விளம்பரப் பதாதைகளுக்கு (banner) ஒருமாதத்திற்கு ரூபா 250/- வீதமும் கட்டணமாக அறவிடப்படும்.

சபா.ரவீந்திரன் J.P.U.M
நகரபிதா,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.
04.12.2012

(சி-1691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சைக்கால பதற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

### பலவீனமான மற்றும் எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்த்தல்

சில பகுதிகளில் நிறைவான நிலையில் இல்லாவிட்டால் கூட பரீட்சை தொடங்குவதற்கு முதல் நாட்களில் அதுபற்றி அலட்டிக் கொள்ளக்கூடாது. பரீட்சையைச் சிறப்பாக செய்ய முடியும். எல்லாம் என்னால் செய்யக்கூடியவைதான் என்று திரும்பத் திரும்ப மனதளவில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். இது உங்களை பலமானவர்களாக்கி விடும். நேர்முறைச் சிந்தனைகள் எப்போதும் சூழ்ந்திருக்க வேண்டும். பரீட்சை மண்டபத்திற்குப் போனால் கூடுதலாக எவருடனும் கதைக்கக்கூடாது.

குறிப்பாக சந்தேகங்கள், முரண்பட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடக்கூடாது. பரீட்சை பற்றிய முரண்பட்ட விடயங்களை கதைக்கும் நண்பர்கள், பரீட்சை மண்டபத்தில் அதைத் தவிர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

### பரீட்சை மண்டபம் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் பற்றியது

பரீட்சை மண்டபம் அமைந்திருக்கும் இடம், மண்டபம் என்பவற்றை முதலிலேயே பார்த்து நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். பழக்கமில்லாத பாடசாலைகளில் பரீட்சை மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் கட்டாயமாக முதலில் அவற்றைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் பலர் இடம்தெரியாமல் பரீட்சைத் தினத்தில் பரபரப்புடன் அலைந்து களைத்துப் போவதுண்டு.

பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய பின்வரும் பொருட்களை முதல் நாளே உறுதிப்படுத்தி எடுத்து வைத்துக் கொள்வது மிகமிக அவசியம்.

பரீட்சை அனுமதிப்பத்திரம், மாணவர் அடையாள அட்டை, நேர அட்டவணை, பென்சில், பேனைகள், சிறந்த கைக்கடிகாரம், உபகரணப்பெட்டி மேலும் வினாக்களுக்கு ஏற்ற விதத்தில் விடையளிக்க வேண்டும். விடைத்தாள்களுக்கு எந்த ஒழுங்கில் இலக்கங்கள் இடப்பட வேண்டும்? எவ்வாறு இணைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவான விளக்கம் வேண்டும்.

### இலேசாக / திருப்திகரமாக இருத்தல்

மிகவும் வசதியானதும் விருப்பமானதுமான ஆடைகளைத் தயார் செய்து பரீட்சைக்கு அணிந்து செல்ல வேண்டும். இறுக்கமற்ற ஆடைகளை அணிய வேண்டும்.

➢ இருக்கை/ கதிரை மற்றும் மேசை ஆடிக்கொண்டிருந்தால் பரீட்சை தொடங்கும் முன்பே மாற்றித்தரும்படி மேற்பார்வையாளரிடம் தயவாகக் கேட்டுப் பெற்ற வசதியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

➢ நீண்ட நேரம் இருந்து பரீட்சை எழுதும் போது எரிச்சலூட்டாமலிருக்க மிகவும் வியர்க்காத ஆடைகளை அணிந்து செல்ல வேண்டும்.

➢ பரீட்சைக் காலம், நாட்கள், நேரம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளல் வேண்டும்.

➢ பரீட்சை பற்றி அறிவித்தல் கிடைத்தவுடன் சொந்த நேர அட்டவணையை படிக்கும் மேசை முன்னால் பெரிதாக ஒட்டிக் கொள்ள வேண்டும். அதனை தீவிரமாக நடைமுறைப்படுத்தவும்.

### பரீட்சை எழுதும் நுட்பங்கள்

➢ வினாத்தாளை சரியாக விளங்கி வாசித்தல் வேண்டும்.

➢ சில விசேட குறிப்புகள் தரப்பட்டிருந்தால் அதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

➢ வினாத் தெரிவு, பிரதான முக்கிய பகுதியைக் குறிக்க தனியான விடைத்தாளைப் பயன்படுத்தல்.

➢ விடையளிப்பது பற்றிய அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுதல்.

➢ நேரத்தை வினாக்களின்படி கவனமாக ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டும்.

➢ மிக இலகுவான வினாவுக்கு முதலில் விடையளிக்கவும்.

➢ விடைத்தாளில் ஒழுங்காக இலக்கமிடவும்.

➢ விடைகளையும் அதன் வினா இலக்கங்களையும் சரி பார்த்து ஒழுங்காகக் கட்டி சுட்டெண்ணையும் சரி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

### படிக்கும் உத்திகள்

➢ அன்றாடம் படிக்கும் பழக்கம் இருந்தால் தேர்வு நேரத்தில் எல்லாப் பாடங்களையும் குறுகிய காலத்தில் படித்து முடிக்க வேண்டும் என்ற கவலை/ மன நெருக்கடி ஏற்படாது.

➢ பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது ஆசிரியரிடமோ பெற்றோரிடமோ விபரம் அறிந்தவரிடமோ கேட்டுத் தெரிந்து கொண்டால் தேர்வு நேரத்தில் பதற்றம் இருக்காது.

➢ அதிகாலையில் எழுந்தால் மூளை சுறுசுறுப்பாக இயங்கும். இதனால் படிக்கும் பாடங்கள் நன்கு மனதில் பதியும்.

➢ தினமும் அரை மணி நேரமாவது காலையில் படிக்கும் பழக்கம் நல்லது.

➢ படிக்கும் போது போதுமான நீர் பருக வேண்டும். தேர்வு சமயத்தில் சைவ உணவுகளை உண்ண வேண்டும்.

➢ கோபமான மனநிலை, பாடங்களை படிப்பதற்கும் மனதில் பதிய வைப்பதற்கும் துணைபுரியாது.

➢ படிக்கும் சூழலை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். கவனம் சிதறுமிடங்களில் இருந்து படிக்கக் கூடாது.

➢ படிக்கும் போது போதுமான விளக்கு/ மின்சார வெளிச்சத்தில் படிக்க வேண்டும்.

➢ படிக்கும் போது ஒரே பாடத்தை தொடர்ந்து பல மணி நேரம் படிக்கக்கூடாது. 45 நிமிடத்திற்கு 5 நிமிட இடைவேளை விட்டு பாடங்களை மாற்றிப் படிக்கலாம்.

➢ உற்சாகப்படுத்தும் வாசகங்களை கண்ணில் படும்படி எழுதி வைக்க வேண்டும். இது தூண்டுகோலாக அமையும்.

### பாடங்களைப் படிக்கும் உத்திகளில் ஒன்று

➢ முதலில் மேலோட்டமாக வாசித்தல்

➢ கேள்விகளை எழுப்புதல்

➢ வாசித்தல்

➢ திரும்பவும் வாசித்தல்

➢ வாசித்ததை இன்னொருமுறை வாசித்துப் பார்த்தல்

➢ முக்கியமானவற்றை மனப்பாடம் செய்தல்

### இன்னொரு உத்தி

➢ பாடத்தை முழுமையாக ஒருமுறை படித்துப் பார்த்தல் (O- Ovrview)

➢ முக்கிய சொற்களை எழுதிப் பார்த்தல், மனதில் இருத்தல் (K-Key words)

➢ வாசித்தல் (R-Read)

➢ நினைத்துப் பார்த்தல் (R-Recall)

➢ பிரதிபலிப்பு (R-Reflect)

➢ படித்ததைச் சரிபார்த்தல் (R-Revi ew)

### PQRST எனும் உத்தி

➢ முன்னோட்ட காட்சி படிப்பது போல் படித்துப் பார்த்தல் (P-Preview)

➢ படித்து குறித்து கேள்வி எழுப்புதல் (Q-Question)

➢ வாசித்துப் பார்த்தல் (R-Read)

➢ படித்ததை தொகுத்துப் பார்த்தல் (S-Sum)

➢ சோதித்துப் பார்த்தல் (T-Test)

1. தேர்வு நேரத்தில் பாடங்களை சிறப்பாக படித்து முடிப்பது தவிர வேறு எந்த விதமான கவலைகளுக்கும் இடம் தரக் கூடாது.

2. படித்துப் படித்து கண்கள் சோர்ந்து போனால் சற்று நேரம் கண்களை மூடி கண்ணுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். குட்டித்தூக்கம் தவறில்லை.

3. வசதியான முறையில் உட்கார்ந்து கொண்டோ நின்று கொண்டோ நடந்து கொண்டோ படிக்கலாம்.

4. படித்தது மறவாதிருக்க திரும்பத் திரும்ப வாசித்தல் நல்லது. (முற்றும்)

திருநாவுக்கரசு ஜிந்தாஜினி
மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## குட்டியப்புலம் அ.த.கவுக்கு புதிய அதிபர் நியமனம்

(மல்லாகம்)

யா/குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையின் புதிய அதிபராக வைத்திலிங்கம் விஜயபாஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார். அருணோதயாக்கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகத்துறைப் பட்டதாரியாவார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையின் வருகை தரு விரிவுரையாளரும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமாவார். யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றினூடாக இசைநாடகத்துறையில் பங்காற்றி வரும் இவர் அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டத்தின் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். (அ-9-21)




யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு அதிபர், கற்பித்த ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். (படம்: மல்லாகம் செய்தியாளர்)

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

இடமாற்றத்திற்கென விண்ணப்பித்து இடமாற்றம் நிராகரிக்கப்பட்ட வட மாகாணக்கல்வி வலயங்களை சார்ந்த ஆசிரியர்கள், வடமாகாணக்கல்வி பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்த பிரதியுடனும் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி வலயங்களில் இருந்து கட்டாய இடமாற்றம் செய்வதற்காக பட்டியலிடப்பட்ட ஆசிரியர்கள், வடமாகாணக்கல்வி பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்த பிரதியுடனும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமாகாணக் கல்வி அமைச்சு காரியாலயத்திற்கு முன்பாக சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாண கல்வி வலயத்தில் இருந்து கட்டயாய இடமாற்றம் செய்வதற்காக பட்டியலிடப்பட்ட ஆசிரியர்களை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சு காரியாலயத்திற்கு முன்பாக சமூகமளிக்குமாறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (அ)

## வடபகுதி மக்களுக்கு அரசு பயப்படுகிறது

### தம்மிக்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் வடபகுதி மக்களுக்கு ஏன் பயந்து போய் உள்ளது என தெரியவில்லை. வடகிழக்கை பிரித்த நீதிமன்றம் தேசத் துரோகியா? என ஐக்கிய சோசலிசக் கட்சியின் உறுப்பினர் தம்மிக்க சில்வா கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தை அரசாங்கம் தேசத்துரோகி எனக்கூறுகின்றது. அப்படியாயின் வடகிழக்கை பிரித்த நீதிமன்றம் தேசத்துரோகியா? புலிகளின் தலைவர்களை தம்முடன் வைத்துக் கொண்டு அரசாங்கம் ஏன் அஞ்சுகின்றது.

மரணமடைந்தவர்களுக்காக தென்னிலங்கையிலுள்ள சிங்கள மாணவர்கள் நினைவுகூர்ந்தல் அதுபற்றி எவ்விதமான பிரச்சினையும் இல்லை. எனினும் அதனையே தமிழ் மாணவர்கள் செய்தால் இந்த அரசாங்கம் ஏன் அஞ்சுகின்றது என்று எமக்கு தெரியவில்லை என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுவர் அரங்கம்

303

## தேடி வந்த செல்வம்



சூலூரில் சுப்பன் என்பவன் அந்த ஊரில் கிடைத்த எடுபிடி வேலைகளைச் செய்து பிழைத்து வந்தான். அவன் சிறுவயதிலேயே தன் தாய் தந்தையரை இழந்தவன். ஊரில் பலரது ஆடு மாடுகளை ஓட்டிச் சென்று மேயவிட்டுத் திரும்ப அவற்றை ஓட்டிவருவதும் அவன் செய்து வந்த வேலைகளில் ஒன்றாகும். இதனால் அவன் சாப்பாட்டிற்குத் திண்டாடாமல் காலங்கழித்து வரலானான்.

ஒருநாள் அவன் வழக்கம்போல ஓட்டிச் சென்று காட்டில் மேய விட்டுவிட்டு தனக்குத் தெரிந்த பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருந்தான். அவன் இருந்த இடத்தில் ஒரு புளியமரம் இருந்தது. அதில் இரண்டு பிசாசுகள் இருந்தன. ஒன்று வயதான கிழப்பிசாசு, மற்றையது இளம்பிசாசு. அவை உரத்தகுரலில் பாடிக்கொண்டிருந்த சுப்பனைப் பார்த்தனர்.

அப்போது கிழப்பிசாசு இளம் பிசாசிடம் இந்தச் சுப்பனை நான் வெகுகாலமாக அறிவேன். இவன் அப்பாவி. கள்ளம் கபடு அறியாதவன். அநாதை. அதனால் சூலூரில் உள்ளவர்கள். இவனிடம் நிறைய

### அம்புலிமாமா கதைகள்

வேலை வாங்கிக்கொண்டு சாப்பாடு மட்டும் கொடுக்கிறார்கள். அதனால் நாம் இவனுக்கு பணம் கொடுத்து உதவவேண்டும் என்றது.

இளம் பிசாசும் சரி இப்படி ஒரு நற்செயலைச் செய்வோம். எனவே இரு பிசாசுகளும் மரத்திலிருந்து கீழே குதித்தன.

கிழப்பிசாசு இளம்பிசாசிடம் நான் செய்வதை பார்த்துக் கொண்டிரு. குறுக்கே பேசாதே என்று கூறி ஒரு பணப்பையை எடுத்து சுப்பனின் முன்னால் எறிந்தது. ஆடிப்பாடிக்கொண்டிருந்த சுப்பன் தன் முன் விழுந்த பணப்பையை கண்டு அதைக்கையில் எடுத்துக் கொண்டான். யாரோ ஒருவருடைய பணப்பை அவருக்குத் தெரியாமல் நழுவி விழுந்திருக்கிறது என்று அவன் எண்ணி சுற்றிலும் பார்த்தான். யாருமே தென்படவில்லை.

அப்போது சுப்பன் அந்தப்பையை அவிழ்த்துப்பார்த்து ஆச்சரியப்பட்டவனாய் ஆ! இதில் ஒரே தங்க நாணயங்களாக இருக்கின்றனவே. இதை நான் வைத்துக்கொள்ளக்கூடாது. நம் ஊர்க்கிராம அதிகாரியிடம் கொடுத்து இதை இதன் சொந்தக்



காரனிடம் ஒப்படைக்கச் சொல்ல வேண்டும் எனக்கூறினான். பின்பு தன் தலைப்பாகையை எடுத்து அந்தப் பையை அதில் வைத்து அதைத்தன் இடுப்பில் இறுகக் கட்டிக்கொண்டான்.

அதைக்கண்ட கிழப்பிசாசு இளம் பிசாசிடம் இவனுக்குப் பணம் கொடுத்து உதவ நினைத்தாய். அதைப் பயன்படுத்திக் கொள்ளத்தெரியாத அப்பாவியாக இருக்கிறானே. இவனுக்கு நல்லதைச் சொல்ல யாராவது ஒருவர் இவனுடன் இருக்க வேண்டும். அதற்கு ஒருவழி செய்கிறேன். நீ ஒரு பணக்காரன் போலாகி சுப்பனிடம் உள்ளபையை வாங்கிக் கொண்டு வா என்றது.

இளம் பிசாசும் ஒரு பணக்காரன் போல மாறி சுப்பனருகே போய் ஆ என் பணப்பை உனக்குக் கிடைத்ததா? நான் இங்கே படுத்து இளைப்பாறி விட்டுப் போனேன். அவசரத்தில் பையை இங்கேயே விட்டு விட்டேன். அதைக்கொடு. எனவே சுப்பனும் மறுபேச்சு பேசாமல் அதை அவனிடம் கொடுத்து விட்டான். இளம் பிசாசும் பணப்பையுடன் போய் கிழப்பிசாசைக் கண்டது.

கிழப்பிசாசும் சூலூரில் லட்சுமி எனும் புத்திசாலிப்பெண் ஒருத்தி இருக்கிறாள். இளம் பெண்ணான அவளை அவனது மாமன் மகன் முத்து வலுக்கட்டாயமாக இன்னும் இரண்டு நாட்களில் மணந்து கொள்ளப்போகிறான். அவன் ஒரு திருடன், குடிகாரன், காவலதிகாரிகளின் கண்களில் படாமல் தலை மறைவாகத் திரிபவன். இந்தத் திருமணத்தை நடக்கவிடாமல் செய்வதோடு லட்சுமியை இந்தச்சுப்பன் மணக்கும்படி செய்யலாம் என்று கூறி இளம் பிசாசிடம் அதற்கான திட்டத்தைக் கூறியது.

லட்சுமி திருமணத்திற்கு அவள் வீட்டில் பந்தல் போடப்பட்டது. அவளது உறவினர்கள் வந்து அங்கு கூடினார்கள். முத்துவின் திருமணத்திற்கு முன் அவனைக்கைது செய்ய காவல் வீரர்கள் வேறு பதுங்கியிருந்தார்கள்.

இந்த நிலையில் கிழப்பிசாசு ஒரு குதிரைபோலாகியது. இளம் பிசாசு தன் தோளில் கனமான பைகளை தொங்கவிட்டுக்கொண்டு முரடன் போல மாறி அந்தக்குதிரை மீது அமர்ந்து கொண்டது. முரடன் குதிரையுடன் லட்சுமியின் திருமணம் நடக்கும் இடத்திற்குச் சென்றான். பதுங்கியிருந்த காவல்வீரர்கள் அவன்தான் முத்து என எண்ணி டேய் முத்து தப்பி ஓடாதே நில் இன்று வசமாக மாட்டிக்கொண்டாய். உன்மீது கொலை, கொள்ளை, என்று நீ செய்த பல குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன. வா எங்களுடன் என்று கத்திக் கொண்டே அவனைத் துரத்திக் கொண்டே சென்றார்கள். குதிரையாக மாறிய பிசாசு முரடனாக மாறிய பிசாசுடன் மணப் பந்தலில் நுழைந்தது. அதைக்கண்டு அங்கிருந்தவர்கள் பயந்து அலறிக் கொண்டு ஓடினார்கள். பிசாசுகள் மணமகனாக



நின்றுகொண்டிருந்த முத்துவின் பக்கத்தில் போனதும் மறைந்து போயின. அவற்றைத் துரத்திக் கொண்டு வந்த காவல் வீரர்கள் மணமகனாக நின்ற முத்துவைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றார்கள். அதைத் தடுக்க முயன்ற அவனது தந்தையையும் காவல் வீரர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள்.

இப்படியாக திருமண வீட்டில் குழப்பம் ஏற்பட்டு லட்சுமியின் விவாகம் தடைப்பட்டது. அப்போது வயதான பெண்மணி ஒருத்தி லட்சுமியிடம் போய் இப்படி முத்து காவல் வீரர்களிடம் அகப்பட்டதும் உன் நல்ல காலத்தினாலேயே அவனை மட்டும் நீ மணந்திருந்தால் வாழ்நாள் முழுவதும் நீ ஒரு கொள்ளைக்காரனின் மனைவி என்ற பெயருடன் இருக்கவேண்டும். உன் திருமணம் இந்த முகூர்த்தத்திலே நடக்கவேண்டும். நான் சொல்வதைக்கேள். நம்மூர் சுப்பன் இளைஞன், மிகவும் நல்லவன், நன்கு உழைப்பவன், உன்னிடம் உன் தந்தை விட்டுப்போன பணம் இருக்கிறது. நீ சுப்பனை மணந்துகொண்டு உன் பணத்தைக் கொண்டு அவனை ஏதாவதொரு தொழிலைச் செய்யச்சொல். அவன் முன்னுக்கு வந்துவிடுவான். நீயும் சுகமாக இருக்கலாம் என்றாள்.

லட்சுமியும் அந்த வயோதிப மாதுவிடம் நீங்கள் சொல்வது நல்ல யோசனையே. அதன்படியே செய்யலாம் எனக்கூறினாள். உடனே சுப்பனை அழைத்துவர சிலர் அனுப்பப்பட்டார்கள். லட்சுமிக்கு அறிவுரை கூறிய வயோதிபப் பெண்மணி வேறு யாருமில்லை. கிழப்பிசாசுதான் அந்த உருவில் வந்தது.

லட்சுமியும் அந்தக்கிழவியிடம் எனக்குச் சுப்பனைப்பற்றி நன்றாகத் தெரியும். கள்ளம் கபடு என்பதே இல்லாத அவனை நான் மணப்பது என் அதிர்ஷ்டமே என்றாள். அந்தத் திருமணத்தை வேடிக்கை பார்க்கவந்த சுப்பனை உடனே லட்சுமியின் சில உறவினர்கள் அழைத்துப்போய் மணமகனாக்கிக் கொண்டு வந்தார்கள். லட்சுமிக்கும் சுப்பனுக்கும் திருமணம் நன்கு நடைபெற்றது.

அவர்கள் இருவரும் வயதான அந்தப் பெண்மணியை வணங்கி அவளது ஆசிகளைப் பெற்றார்கள். அப்போது இளம் பிசாசு முதியவன் வேடத்தில் இருந்த கிழப் பிசாசிடம் நாம் நினைத்ததைச் செய்து முடித்துவிட்டோம். இவர்களுக்கு நாம் கொடுக்க எண் ணிய பணத்தை கொடுத்து விடுகிறேன் என்று கூறி அவர்கள் முன் பணத்தைப்போட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!

-ராஜ்சிவா- 06




மாயன்கள் கணிதம், வானியல், கட்டடக் கலை, நகர அமைப்பு, அறிவியல், உணவு வேளாண்மை. கலை, கலாச்சாரம், விளையாட்டு என அனைதிலும் உச்சத்தில் இருந்திருக்கிறார்கள். இவையெல்லாம் எப்போ? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன். அதுதான் எம்மை வியக்க வைக்கிறது. அதை இங்கு சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

இன்று நாம் பயன்படுத்தும் கணிதம், **தசம கணிதம் (டெசிமல் சிஸ்டம்)** என்னும் அடிப்படையைக் கொண்டது. அதாவது 10 ஐ அடியாகக் கொண்டு உருவாக்கிய கணிதம். 1,10,100,1000,10000....இப்படி. அத்துடன் 1,2,3,4,5,6,7,8,9,0, எனப் பத்து இலக்கங்களையும் எமது கணக்கியலில் நாம் பயன்படுத்துகிறோம். இப்படி 10ஐ அடியாக மனிதன் கணிக்க ஆரம்பிப்பதற்கு ஒரே காரணம், அவனுக்கு கைகளில் 10 விரல்கள் இருந்ததுதான். ஆரம்ப காலங்களில் கை விரல்களால் கணக்கிட்ட வழக்கம் தொடர, அதுவே கணிதமுமாகியது.

இப்பொழுது இப்படிப் பாருங்கள்...! மனிதனுக்கு ஒரு கையில் மூன்றே மூன்று விரல்தான் இருக்கிறது என வைத்துக் கொண்டால், இரண்டு கைகளிலும் மொத்தமாக அவனுக்கு 6 விரல்கள் இருந்திருக்கும். அப்போது, மனிதனின் கணிதவியல் 6ஐ அடியாகக் கொண்டு இருந்திருக்கும். அதாவது 1,6,36,216,1296... என இருந்திருக்கும். என்ன புரிகிறதா...? ஆனால், 6ஐ அடியாகக் கொண்டு கணிப்பதை விட, 10 ஐ அடியாகக் கொண்டு கணிப்பது, மிகப் பெரிய எண்ணை அமைப்பதற்கு சுலபமாக இருக்கும். காரணம் 10 என்பது 6 ஐ விடப் பெரியது. அடி எண் பெரிதாக இருந்தால், அதிக எண்ணிக்கையில் கணிப்பது இலகு வாக இருக்கும். ஆனால், கணினியை எடுத்துக் கொள்ளுங்கள். கணினிக்கு பத்து விரல்கள் கிடையாது. அதற்கு இரண்டே இரண்டு விரல்கள்தான் உள்ளது. மின்சாரம் சென்றால் 1, மின்சாரம் செல்லாவிட்டால் 0. ஆகையால் கணினி 2ஐ அடியாகக் கொண்டே கணிக்கிறது. அப்படிக் கணிப்பதை பைனரிசிஸ்டம் என்பார்கள். அது 1,2,4,8,16... என அமையும். கணிதத்தில் அடி எண் அதிகமாக இருந்தால் கணிப்பது சுலபம் என்றேன் அல்லவா? ஆனால், மனிதனை விடக் கணினி மிகமிக வேகமாகக் கணிக்கிறதே! அப்படிக் கணிப்பதற்குக் காரணம் மனிதன் கணிப்பது போல பத்து இலக்கங்கள் இல் லாமல், கணினிக்கு இரண்டே இரண்டு இலக்கங்களை மட்டும் பயன்படுத்தப்படு வது தான். அந்த இரண்டு இலக்கங்களும் 1,0 ஆகும்.

சரியாகக் கவனியுங்கள், சுலபமாய் எண்களை அமைப்பது என்பது வேறு, வேகமாய்க் கணிப்பது என்பது வேறு, இரண்டும் வேறுவேறான விடயங்கள் என்பதைத் தவற விட்டுவிடாதீர்கள்.

இப்போது மாயன்களிடம் நாம் வரலாம்....!

**அதிசயிக்கத்தக்க வகையில் மாயன்கள் 20 ஐ அடியாகக் கொண்டு கணித்திருக்கிறார்கள்.** கைவிரல்கள் பத்து, கால் விரல்கள் பத்து என இது அமைந்திருக்கிறது. 20 ஐ அடியாகக் கொள்வதை **வைஜெசிமல் சிஸ்டம்** என்பார்கள். அது 1,20,400, 8000,160000.... என அமையும். இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், 20ஐ அடியாகக் கொண்டு கணிப்பதற்கு மாயன்கள் இருபது இலக்கங்களைப் பாவனைக்கு வைத்திருக்கவில்லை. மூன்றே மூன்று இலக்கங்களைத்தான் பாவித்திருக்கிறார்கள். அதிக எண்ணிக்கையில் சுலபமாகக் கணிப்பதற்கு 20 இன் அடியும். கணினியைப்போல வேகமாயக் கணிப்பதற்கு மூன்று இலக்கங் களும் அவர்களுக்கு உதவியிருக் கிறது.

புள்ளி, நேர்கோடு, நீள்வட்டம் என்னும் மூன்றும்தான் அவர்கள் பாவித்த அந்த மூன்று இலக்கங்கள். இவற்றில் புள்ளி 1ஐயும் நேர்கோடு 5 ஐயும் நீள்வட்டம் பூச்சியத்தையும் குறிக்கிறது.

மாயன்கள் பாவித்த எண்களில் அட்டவணையைப் பார்த்தால் உங்களுக்கு அது புரியும்.

புள்ளிகளையும் கோடுகளையும் வைத்து, இலட்சங்களில் எப்படி மிகப்பெரிய எண்




Mayan positional number system

களைக் கணித்தார்கள் என்பதற்கான சில விளக்கப் படங்களையும் உங்களுக்கான புரிதலுக்காகத் தருகிறேன்.

இதனுடன் இன்னுமொரு விசேடமாக எண்ணிக்கைகளை இலக்கங்களால் மட்டுமில்லாமல் ஹிரொகிளிஃப் என்னும் சித்திர எழுத்துக்கள் மூலமும் எழுதியிருந்தார்




கள். இந்த வழமை மாயாக்களுக்கும் எகிப்தியர்களுக்கும் தனிச் சிறப்பாக அமைந்திருந்தது. இந்தச் சித்திர எழுத்துக்கள்தான் பின்னர் மாயன்களைப் பற்றி நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள பெரிதாக உதவியது.

இந்த இலக்கங்களின் முறையை வைத்து மாயன்கள் கோடிக்கணக்கான எண்ணிக்கையைக் கூட எழுதிவிடுகிறார்கள். சுலபமாக கணித்துவிடுகிறார்கள் நாம் கோடிகள், ஆயிரம் கோடிகள் என்பவற்றை ஊமல பற்றிச் சொல்வதற்கு பயன்படுத்தும்போது, மாயன்கள் எதற்கு அவற்றைப் பயன்படுத்தினார்கள் தெரியுமா...? வானியலில்.

வானத்தில் சூரியக் குடும்பத்தின் ஒவ்வொரு கோளும் எப்படி நகர்கிறது என்பதை துல்லியமாக கணித்தார்கள் மாயன்கள்.

அவர்கள் அப்படிக்கணித்துத்தான், கடைசியில் எங்கள் அமைதியையே குலைக்கும்- 2012 இல் உலகம்அழியும்- என்பதில் எங்களைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

மாயன்கள் வாயனவியலில் ஆராய்ச்சி செய்தார்கள் என்று சொல்லும் நாம், அவர்கள் எதை ஆராய்ந்தார்கள் என்று தெரிந்தால், நம்பவே முடியாமல் நகர்ந்துவிடுவோம். சூரியனையும் அதன் கோள்களையும் மற்ற இனத்தவர்கள் ஆராய்ந்தபோது மாயன்கள் **பால்வெளிமண்டலத்தையே ஆராய்ந்திருக்கிறார்கள்.** வெறும் கண்களால் சந்திரனைத் தாண்டி அவ்வப்போது செவ்வாய், வியாழன் ஆகியவற்றை மட்டுமே பார்க்கக் கூடிய எமக்கு மாயாக்கள் பால்வெளி மண்டலத்தையே ஆராய்ந்தார்கள் என்றால், அதன் சாத்தியங்கள் எது என்பதைப்பற்றி கேள்வி எழுவது நியாயமான ஒன்றுதான். மாயாக்கள் அப்படி என்னதான் ஆராய்ந்தார்கள்? எப்படியெல்லாம் ஆராய்ந்தார்கள்?

அமெரிக்கா என்று சொல்லப்படும் மிகப்













பெரிய நிலப்பரப்பு, வடஅமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென்னமெரிக்கா என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அமெரிக்காவில் மெக்சிக்கோ, குவாத்தமாலா, எல்சல்வடோர், கோஸ்டாரிகா, கொண் டூராஸ், பனாமா, நிக்கரகுவா, பெலிஷே, ஹைட்டி, கியூபா போன்ற நாடுகள் இருக்கின்றன. உலக அழிவுப்புகழ் மாயன்கள் வாழ்ந்து வந்த

> 21.12.2012 அன்று காலக்டிக் ஈக்வேட்டர் எனும் பால்வெளிமண்டலத்தின் மத்தியரேகையை சூரியன் அடைகிறது. அதனால்பால்வெளி மண்டலத்தின் மையப்புள்ளியும் சூரியனும் மத்திய ரேகை என்னும் நேர்கோட்டில் வருகின்றன. அத்துடன் பூமியின் அதேநேர்கோட்டில் வருகிறது. அத்தோடு நிற்காமல் இந்தப்பிரிசெஸன் எனும்- பூமியின் தலையாட்டலின் பூச்சியப்புள்ளியான போலாரிஸ் ஐயும்பூமி 26,000 வருடங்களின் பின்னர் மிகச்சரியாக அடைகின்றது. அத்தோடு டார்க் ரிஃப்ட் ஐயும் மிக அண்மிக்கிறது. 26ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் மிக அற்புதமான ஒரு வானிலை வரிசையாக இதைக்கொள்ளலாம். இப்படி எல்லாமே சேர்ந்த ஒரு நிகழ்வு அதுவும் மாயன் சொல்லிய 26 ஆயிரம் வருடங்களில் நடைபெறுவது ஒரு தற்செயல் நிகழ்ச்சியாகவே இருக்கமுடியாது. அப்படி இருக்க முடியாது என்னும் ஆச்சரியம் தான் எல்லோரும் இந்த விடயத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு காரணமாகிறது.

இடமும் இந்த மத்திய அமெரிக்க நாடுகளில் தான். குறிப்பாக மெக்சிக் கோவிற்கு தென்கிழக்குப்பகுதியில் ஆரம்பித்து ஏறத்தாள மூன்று இலட்சத்து50 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவுள்ள நிலப்பரப்பில் மாயன்கள் வாழ்ந்துவந்தார்கள். மாயனின் வரலாறு, கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகியிருக்கிறது என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனாலும் கி.மு. 2000 முதல் கி.பி.900 வரையுள்ள காலப்பகுதிகளில் தான் மாயன்களின் நாரிகம் உச்சத்தை அடைந்திருந்தது. இந்தக்கால கட்டங்களில் எலகின் பல நாடுகளில் பல இனங்களுக்கிடையே மதங்கள் தோன்றியிருந்தன. அப்படித் தோன்றிய மதங்க ளும் அதனைக் கடைப் பிடித்த இனங்களும் நாம் வாழும் பூமிதான் பிரதானமானது என்று நினைத்திருந்தார்கள். பூமியை மையமாக வைத்தே சூரியன்உட்பட அனைத்துக்கோள்களும் இயங்குகின்றன என்றும் நம்பி வந்தார்கள்.




கடவுள் முதலில் பூமியை உருவாக்கினார். அதன்பின்னர் பூமி இருட்டாக இருக்கிறது என்று கருதி சூரியனையும் சந்திரனையும படைத்தார் என்று பைபிள், குர்ஆன், யூத மதம் ஆகிய மூன்று பிரதான மதங்களும் சொல்கின்றன. இந்துமதத்தின் உபவேதங்களில் ஒன்றான ஜோதிடத்தில் பூமியை மையமாக வைத்து நவக்கிரகங்கள் சுற்றுகின்றன என்ற அடிப்படையிலேயே கணிப்புகள் யாவும் இருந்திருக்கிறது.

அஸ்ரோலாஜி, அஸ்ரோனமி என்னும் இரண்டு ஆங்கிலச் சொற்களை அடிக்கடி பாவித்தாலும்அவை இரண்டினதும் வித்தியாசத்தைப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. வானத் தில் இருக்கும் கோள்களைப்பற்றியும் நட்சத்திரங்களைப் பற்றியும் இந்த இரண்டுமே சொல்வதால் இவற்றை அனேகர் ஒன்றாகவே பார்க்கின்றனர். ஆனால், அஸ்ரோனமி என்பது விஞ்ஞானம், அஸ்ரோலஜி என்பத சாஸ்திரம். அதாவது ஒன்று வானவியல், மற்றது வான சாஸ்திரம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E O/L EXAMINATION

## 2012 (December) Sample Question Paper | Western Province

## English Language

# Part I

*Answer all questions on this paper itself.*

**Test 01**

Fill in the blanks in the following exchanges. Use words from the box. Write the correct letter in the blank. One has been done for you.

*(Marks : 05)*

(a) soap (b) computer (c) envelop (d) hands (e) radio (f) train

1. A. Look out! Never jump off a moving ............



B. Sorry, My fault.

2. A. Food is ready!

B. have you got any ......(a)........?
I want to wash my ................



3. A. Excuse me, I want to listen to the match. Can you switch on the ..............?

B. Sure.



4. A. The .................. course I am following is really good.



B. Is it so, I will also join in.

5. A. I've got to post this letter. Do you have an .................... with you.

B. You're lucky. I have one.



**Test 02**

Read the description of the following science fiction and complete the paragraph given.

*(Marks : 05)*

*The first one is done for you.*

**Trouble With Time**
**By**
**Arthur C. Clarke**

A thief tries to steal the famous Statue of the Sirem Goddess from The Museum of Meridian City, in the planet Mars. Detective Inspector Rawlings tells the story in the departure lounge of the space station or Mars, on his way back to earth.

Mr. Maccar, an art dealer and another passenger on the journey to Earth, listen to his story.

The book titled (1) ......... Trouble With Time ..... was written by (2) ............ in 1987. It tells about the Statue of (3) ........... which was on display at the Meridian City in (4) ................. mars. The story of the theft is revealed by (5) ............. on his return to (6) .......................

**Test 03**

Write a **paragraph** about a festival in Sri Lanka. Use the questions given in the box to guide you. Use about 50 words.

*(Marks : 05)*

| | |
|---|---|
| What is the festival called? | When does it take place? |
| How long does it last? | Do people wear special clothes? |
| Do people eat special food? | What activities take place? |
| | Why you like it? |

**Test 04**

Here is a part of a coversation. Match 'A' s comments with 'B' s responses. Write the number of the comment in the correct box. *The first one is done for you.*

*(Marks : 05)*

A
1. Congratulations Hasitha! So you're the head prefect of the school.
2. It'll be very difficult with your sports activities and don't forget your studies.
3. What are your plans for the future?
4. That's interesting. Who is your deputy?
5. Your parents must be very proud of you.
6. All right. Wish you the best. Work hard.

B
a) First I have to organize the badge investiture ceremony and then a workshop on leadership. ☐
b) Thank you Miss. I'll do my best. ☐
c) Sisira, Well, I'm lucky to have him. ☐
d) I won't I'll keep a balance of studies and sports. ☐
e) Yes They are throwing a party for my friends ☐
f) Thank you it was a pleasent surprise ☐

**Test 05**

Complete the dialogue given below. Use the phrases in the box. Write the letter of the phrase. *The first one is done for you.*

*(Marks : 05)*

Vindya : What are you doing (1) .......................... (b) ......?
Thilini : (2) ...............................
Vindya : Tired of studying. Shall we go out?
Thilini : That would be wonderful.
Vindya : (3) ..............................?
Thilini : No. (4) ..................... going to the cinema.
Vindya : Well then, (5) ............................
Thilini : Okay. Fine by me. Where shall we meet?
Vindya : (6) ........................ We have to buy something to eat too.
Thilini : Great! See you at 10.
Vindya : See you. I'll be on time.

| | |
|---|---|
| (a) at the cafe, in front of the gate | (b) on Saturday |
| (c) I don't really like | (d) nothing special |
| (e) let's go to see the match | (f) shall we go for a film |

**Test 06**

Read the following notice.

**Lost**

Has anypne seen my Text Book 'The Village by the Sea? I lost it at the Public Library Gampaha. My name is written on it. If you find it, please return to me.

Desham Bandara
Kurulugama MV
Kurulugama

You have found the book and it is now with you. Write a note to Deshan.
You may include:
- where you found the book
- what you did (looked for the owner)
- ask Deshan a date, time and a place to return the book

*(Marks : 05)*

Use about 40 words

**Test 07**

Read the text and answer the question given below

Miss Sanduni Gunathilaka was a teacher in a leading boys school in Kurulugama. She was in charge of Grade Six students. She always enjoyed teaching them, because they were very quick and because they thought about everything very carefully. One day she had to teach about clothes people wear in other countries. She said to her students "People in a lot of countries in Asia wear white clothes at funerals, but people in America and in Europe often wear dark colours, but they wear white clothes when they're happy. What colour does a woman wear in America when she marries, Kanchana?"

Kanchana said, "White, Miss, because they are happy."

"That's good,Kanchana," Miss Sanduni said, "You're quite right. She wears white because she's happy."

But then one of the boys from the back row in the class put his hand up.

"Yes, Thilina!" Miss Sanduni said, "Do you want to ask something?"

"Yes, please, Miss," Thilina said, "Why do men in America wear black when they marry, Miss?"

1. Why did Miss Sanduni like teaching the students in Grade Six?
(a) ........................... (b) ...........................
2. Underline the correct answer.
Miss Sanduni's lesson was about ............................
(a) clothes in Asia (b) clothes in America (c) clothes in other countries
3. What is the colour women in America wear when they marry?
4. Where was Thilina seated in the class?
5. What colour do men in America wear when they marry?

**Test 08**

Write a paragraph about what you will do if you get a million rupees.
Use about 60 words.

*(Marks : 05)*

If I get a million rupees I will ...........................................................................

# Part II

**Answer all questions on this paper itself.**

**Test 09**

Underline the most suitable word from the brackets.
*The first one has been done for you*

*(Marks : 05)*

World water day was declared on March 22. There were many special programmes held in school to focus (1).............(attendance, attentive, attention) on the need to protect and (2).............(conservation, conserve, consume) one of the most precious natural resources mother nature has given us. We are all aware of how that all living creatures and even plants totally depend on water for (3)..........(existence, exist, existent), yet humans do no value it and pollute

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

our waterways. Do you know that there are many people throughout the world who do not have (4)............(access, accession, accessory) to safe drinking water. You must not waste this precious gift of nature. It's already (5)............ (scarcity, scarcely, scarce) in many parts of the world and soon we'll face a major crisis if we don't use it (6)............(carefully, carelessly, carefree) Can you imagine what it would be like to live without water?

**Test 10**

Read the following passage. In each line one word is incorrect and it is underlined. Write the correct word in the space provided. *The first one has been done for you*

*(Marks : 05)*

I dream a lot. Doctors <u>says</u> that dreaming is good for you — 1. ....(say).....
but the trouble is I <u>dreaming</u> about hard work. When I — 2. ................
wake up the next morning. I always feel tired. I asked <u>me</u> — 3. ................
brother for <u>any</u> advice. He told me relax before going to — 4. ................
bed. He gave me a magazine with <u>a</u> article about animals. — 5. ................
It had many <u>picture</u>. That night I dreamt I was in a zoo. The — 6. ................
animals escaped and <u>follow</u> me home. They stayed in the — 7. ................
garden and made a lot of noise. I couldn't <u>sleeping</u> at — 8. ................
all. The next morning, I <u>think</u> I was alright. But it didn't — 9. ................
work out that way. <u>Unfortunate</u>, when I woke up, I was — 10. ...............
<u>most</u> tired than usual. — 11. ...............

**Test 11**

Fill in the blanks using words given. *The first one has been done for you*

*(Marks : 07)*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| affect | charactor | different | fortune | future | is | his of |
| people | planets | popular | position | the | to | was |

**Fortune Telling**

We all make plans for the future all the time. Some of them are big plans which affect our future lives. To find out about the future, (1) .......... people .......... have turned on to (2) ............ tellers. They use many (3) ........... ways to read the (4) ........... Astrologists say that the (5) .......... of the stars and (6) .......... at our birth can (7) ........... our own future and (8) ............ One of the most (9) ............ forms of the fortune telling (10) ............ palmistery, the study of (11) ..............lines of the palm (12) ............ your hand. When Reagan (13) ........... the President of America, (14) ............ wife organized his sechudule (15) .......... fit in with the predictions of his astrologer. Important journeys and meetings had to wait for a 'good day'.

**Test 12**

Hasitha is getting ready for his examination at the end of the year. He read a book named 'Passing Exams'. Here is a page from the book, Read and answer the questions given.

*(Marks : 05)*

<u>**How to improve your writting**</u>

**Think!** * Think about a plan. If it is a story, what is going to happen? If it is a description, what is most important and how you are going to organize it.
- Think about your readers. Who are you writing for? What will interest them? What do they need to know?

**Get ideas!** * Close your eyes and relax. Try to see the description or the story happening in your head.
- Write down some notes or just a list of words about what you are going to write about.
- Talk about your ideas with a partner, and write down any more ideas that come to you while you are talking.

**Organize your ideas!** * Look at your notes. Select the ideas you want to use. Decide what you are going to put first, what second etc.

**Draft!** * Write the first draft. All writers change what they write because they get better ideas while writing takes place.
- Do not worry about mistakes at this stage. You can look for mistakes later.

**Read Through!** * Think about your audience. Is it interesting? Does it make sense?
- Are there any mistakes? Think about the grammer. Think about spelling. Think about punctuation?
- To find out the corrct word, check in a dictionary.

**Re-write!** * Now that you have thought about changes and mistakes: write it out again. Make it as good as you can.

1. Who do you have to think of when you are planning?
2. What method is suggested in the text, to see the description or the story in your head?
3. Why do writters change what they have written during the draft?
4. Write two types of mistakes you may make during the read through stage?
(i) .................................. (ii) ..................................
5. Where would you look into, to find the suitable word before re-write?

**Test 13**

Complete the story given below with words given in the box.
*The first one has been done for you*

*(Marks : 05)*

| sort out, make up, looking for, bring back, try on, <u>came across</u> |
|---|

Last week, I went to a cloths shop to buy a shirt for my brother Saman for his birthday. I (1) <u>came across</u> two shirts that was displayed in a shelf. I said to the assistant, "I am (2) ................... a shirt for my brother. I like the green one and the red one over there, but I can't (3) ..................... my mind which me to buy." "Never mind" said the assistant "Take them both and ask your brother to (4) .............. both shirts. Then you can (5) .................. the one he has doesn't want and I'll give back your money."

My brother choose the green shirt, so I took back the red one to the shop. There was a different shop assistant and she said, I'm sorry. The assistant you spoke to made a mistake. We can't give your money back. The manager is not here today or else he'll be able to (6) ................... your problem."

That was how I became the owner of a red shirt.

**Test 14**

You have a pen friend in England. He is visiting Sri Lanka to collect information for his project "Ancient Ruines in Sri Lanka."

Write a letter to your uncle who is in Polonnaruwa requesting him to help your friend.

Include
- about your friend
- the reason for his visit
- need of a place to say with food
- to see interesting places
- to interview people

OR

Write a letter of complaint to the authorities of the Western Provincial Council on the problems caused by posters in your area.
- where you find them
- the problems caused
- what steps should be taken to stop it.

Use about 125 words.

*(Marks : 10)*

**Test 15**

Read the following text and answer the questions given below.

All his life Hasitha had lived in a big city, but he had always loved the country, and was particularly interested in Agriculture, so when you finished school he decided to go to an agricultural college and study on farming. He studied all kinds of things at college during his first year and when the first vacation came he thought he was already an expert farmer.

He had an aunt called Dilini who had a farm in the country, so after a week at home in the big city, he phoned and asked whether he could come and spend a week with her. He said that, considering he had been at the agricultural college for a year already, he might be able to give her some really up-to-date ideas about farming methods which could be useful to her.

His aunt tired not laugh as she answered. She asked Hasitha to come whenever he liked, and she would be happy to see him and to explore all the largest agricultural ideas with him. She had been farming for twenty years, and attended most of the camps organized by the Department of Agriculture. So she suspected that she did not have much to learn from a first year student.

However, she went to the station to meet Hasitha when he turned up, and drove him back to her farm for lunch, during which they talked about the family.

After lunch, aunt Dilini said to her nephew, "I suppose you'd like to get on with looking around the farm now, so that you can give me your expert advise about what we are doing wrong." Hasitha blushed and protested that he would probably not be able to find anything wrong at all, but Dilini could see that he was saying this only out of politteness, and that he really thought himself an expert on farming.

As they went out of the house to start the tour, Dilini said, "I suppose you know that we grow a variety of vegetables on this farm. We sell **them** to the big markets in Colombo. But now we are having a lot of competition from other farms."

Hasitha nodded. They were entering a nursery full of young plants, and Dilini asked Hasitha to tell her what he thought of them and told him not be shy.

"Mm," he said solemnly, "your methods are certainly very old-fashioned. It isn't surprising you can't complete with other farms. We've had some lessons from an Indian grower, you know, I don't suppose you get more than two kilos of tomatoes off each of these plants" He smiled in a superior way.

"I'm sure we don't," answered her aunt. "These are chille plants."

(1) State whether the following statements are true or false by writing **T** or **F** against them.

(a) Hasitha liked to live in a big city. (....)
(b) After his studies he joined an agricultural college. (....)
(c) Hasitha wanted to stay a week with his aunt during the holidays. (....)
(d) He wanted to give his aunt new ideas on farming. (....)

(2) How long had his aunt been farming?
(3) What did Hasitha and his aunt discuss during lunch?
(4) Where did Dilini sell her vegetables?
(5) Why could not Aunt Dilini get tomatoes from the plants in the nursery?
(6) What do the following refer to:
nephew (in line 15) .....................
them (in line 21).....................
(7) Find words which have the same meaning as the following from paragraph 1.
holiday ............................
specialist ..........................

**Test (16)**

Write on **one** of the followig. Use about 200 words.

*(Marks : 15)*

1. As the President of the English Literary Association of your school. You have to talk to an audience of senior students about the **'Importance of Learning English in School.'** Write out the speech you would make including the following.
- English should be learnt not only to pass the exams.
- It is the language of computers that further your education.
- It will help you to spend your leisure happily.

2. Write an article to be published in the school magazine on **'Tourism - Its - good and bad'**
- Explain what tourism is.
- Its advantages and disadvantages.
- Your suggestions to improve tourism in the country.

3. Write an essay on "Games - How they improve your health and personality.' Feel free to express your views. You may agree or disagree.

4. Complete the dialog between Vindya and Thilini. They are telling each other how they spent a long week end.

Vindya : Hello Thilini, We went to Galle last weekend. Sorry I couldn't let you know.
Thilini : Its OK. We too went to Sigiriya. Did you enjoy the trip?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொண்ட அமோக வெற்றியானது பாலஸ்தீன மக்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாலஸ்தீனத்தை அங்கீரிப்பதை அதிகாரம் மிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடான அமெரிக்கா எதிர்த்து நின்றதாலேயே இதில் காலதாமதம் ஏற்பட்டது.

அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற சில நாடுகள் பாலஸ்தீனத்திற்கு உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நிலை வழங்குவதைக்கூட எதிர்த்த போதிலும் பொதுச்சபையில் இதற்கான எதிர்ப்பு குறைந்த நிலையில் பாலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சிவப்புக் கம்பள வரவேற்பு வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார்.

அதிபர் செயலக வளாகத்துக்குள் புதைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனத்தின் முன்னாள் அதிபர் மறைந்த ஜசீர் அரபாத்தின் புதைகுழியில் மலர் வணக்கம் செலுத்திய அதிபர் அபாஸ் அதன் பின்னர் ஐ.நா.வில் பெற்றுக் கொண்ட வெற்றியை, மறைந்த அதிபரின் நினைவாக சமர்ப்பித்தார். உலகெங்கும் பரந்துவாழும் பாலஸ்தீனர்கள் பெற்றுக்கொண்ட வெற்றியாக இது காணப்படுவதாகவும், ஐ.நா.விடமிருந்து கிடைக்கப்பெற்ற இந்த அங்கீகாரமானது பாலஸ்தீன வரலாற்றில் முக்கிய படிக்கல்லாகக் காணப்படுவதாகவும் அபாஸ் அப்போது குறிப்பிட்டார்.

"உலகெங்கும் வாழும் பாலஸ்தீனர்களே உங்களது தலைகளை உயர்த்திக்கொள்ளுங்கள் ஏனெனில், நீங்கள் பாலஸ்தீனர்கள். நீங்கள் பாலதீனர்கள் என் அங்கீகரிக்கப்பட்டதால், ஆக்கிரமிப்புக்களில் இருந்து விடுதலையாகி பலம்பெற்றுள்ளீர்கள். நீங்கள் வரலாறு படைத்துள்ளீர்கள். விரைவில் உலகப்பந்தில் பாலஸ்தீன தேசமும் வரையப்படும்" எனவும் அவர் பெரு மகிழ்ச்சியுடன் கூறினார்.

# 'நாம் தற்போது எமக்கென்றொரு தேசத்தைக் கொண்டுள்ளோம்'

## பாலஸ்தீன அதிபர் மஹமொட் அபாஸ்

ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனர்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியில் மேற்குக் கரைக்குத் திரும்பிய பாலஸ்தீன அதிபர் மகமுட் அபாஸ் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் "ஆம் நாங்கள் தற்போது எமக்கென்றொரு 'தேசத்தைக் கொண்டுள்ளோம்" என உற்சாகப்பெருமிதத்துடன் கூறினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்பை 138-9 என்ற வாக்குகளின் அடிப்படையில் பாலஸ்தீனர்களுக்கு ஐ.நா.வின் உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நிலை வழங்கப்பட்ட 3 நாட்களின் பின்னர். "ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனம் மிக வரலாற்று முக்கியத்துவம் மிக்க சாதனை ஒன்றை அடைந்துள்ளது" என மேலும் அபாஸ் தனது மக்களிடம் தெரிவித்தார்.

"பாலஸ்தீனம் என்கின்ற தேசம் அங்கீகரிக்கப்படவேண்டும். பாலஸ்தீனர்களுக்கு சுதந்திரம் வழங்கப்படவேண்டும். எந்தவொரு வன்முறையும் இன்றி பாலஸ்தீனம் சுதந்திர தேசமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். இங்கு ஆக்கிரமிப்புக்கள் மேற்கொள்ளப்படக்கூடாது என இந்த உலகம் உரத்த குரலில் அறிவித்துள்ளது" எனவும் திரண்டிருந்த தனது மக்கள் முன் அதிபர் அபாஸ் தெரிவித்தார்.

பாலஸ்தீனம் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டபின்னர் பாலஸ்தீனர்களுக்கிடையில் ஒற்றுமையைப் பலப்படுத்துவதுடன் பற்றா மற்றும் ஹமாஸ் ஆயுதக்குழுக்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதுமே தனது முதன்மையான மிக முக்கியமான

**ஏஜென்ஸ் பிரான்ஸ்- பிறெஸ்**

நோக்கமாக உள்ளதாக இந்நாட்டு அதிபர் மேலும் உறுதியளித்துள்ளார். நாட்டில் மீளிணக்கப் பாட்டை உருவாக்கத் தேவையான அத்தியாவசியமான நகர்வுகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய வுள்ளதாகவும், பிரிவினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதையே மக்கள் விரும்பவதாகவும் அதிபர் அபாஸ் மேலும்சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முழு உறுப்புரிமையை பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஆண்டில் பாலஸ்தீன அதிபர் முயற்சி எடுத்தபோதும் அது வெற்றியளிக்காததால், தற்போது ஐ.நா.பொதுச்சபையில் பெற்றுக்

**ஐ.நா.சபையில் பார்வையாளர் தகுதிபெற்ற நாடாக பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதற்கு கடந்த 29.11.2012 அன்று வியாழக் கிழமை தீர்மானம் கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 193 உறுப்பு நாடுகளில் 138 நாடுகள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. பிரான்ஸ், நோர்வே, சுவிட்சர்லாந்து நாடுகள் உட்பட பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக வாக்களித்திருப்பது முக்கியமான உலக நகர்வாக இருக்கிறது. இஸ்ரேல் அமெரிக்கா, கனடா , இங்கிலாந்து, ஜேர்மனி உள்ளிட்ட 9 நாடுகள் இத்தீர்மானத்தை எதிர்த்தன. 41 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. தீர்மானம் வெற்றிபெற்றதன்மூலம் பாலஸ்தீனத்திற்கு *பார்வையாளர் நாடு* எனும் புதிய அங்கீகாரம் கிடைத்துள்ளது.**




**இந்தப்புதிய அங்கீகாரம்மூலம் ஐ.நா. அமைப்புகளுடனும் பாலஸ்தீனமும் இணைந்து விவாதங்களில் பங்கெடுக்கலாம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயற்பாடுகளுடன் தன்னை இணைத்துக் கொள்ளலாம். இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்பில் நேரடியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அதிகாரபூர்வமாக முறையிடக் கூடிய வாய்ப்பு பாலஸ்தீனத்திற்கு இந்த அங்கீகாரத்தின் மூலம் கிடைத்துள்ளது. இவ்வகையில் பாலஸ்தீன மக்களின் விடுதலைப்போராட்டத்தில் இந்நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகிறது. அமெரிக்காவால் ஆளப்படும் ஒற்றைத்துருவ உலகு அல்ல. மாறாக பல்துருவ உலகு சக்திகளால், தீர்மானிக்கப்படும் உலகு என்பது அதன் பாலஸ்தீனம் பெற்ற இந்த வெற்றியின்மூலம் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.**

இந்த வெற்றியானது, அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் போன்ற முக்கிய அனைத்துலக அமைப்புகளில் பாலஸ்தீனமானது மிக இலகுவில் தனது பிரச்சினைகளை முதன்மைப் படுத்துவதற்கும் பல ஆண்டுகளாக இஸ்ரேலுடன் மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த வெற்றியை அடுத்து, நாடு திரும்பிய பாலஸ்தீன அதிபர் தனது வாகனத்திலிருந்து இறங்கி றமல்லாவில் அமைந்துள்ள அதிபர் செயலகம் வரை, நடந்து செல்லும் வரை

"பாலஸ்தீனத் தலைமை இன்று சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளதால், நான் இந்த மகிழ்வைக் கொண்டாடுவதற்காக இங்கு வந்துள்ளேன். எமது வாழ்வில் நாம் ஒருபோதும் சந்தித்திராத மிக்க மகிழ்ச்சியான தருணம் இதுவாகும்" என மேற்குலகிற்கு வந்திருந்த **பஜிஸ் பனிபடில்** குறிப்பிட்டார். "தனிநாடாக அங்கீகரிக்கப்படுவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்லாத போதிலு, அதிபர் அபாஸ் எம்மை வரலாற்று நிலையிலிருந்து பிறிதொரு புதிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளார். தற்போது நாம் மேலும் சுமையை சுமக்க வேண்டியுள்ள போதிலும், நாங்கள் ஒன்றுபட்டு நிற்கும்போது இச்சுமைகள் எம்மை ஒன்றும் செய்துவிடாது" என 54 வயதான மொகமட் பனி ஊடே தெரிவித்தார்.

பாலஸ்தீனர்கள் ஐ.நாவில் தமக்குக் கிடைத்த வெற்றியைக் கொண்டாடுகின்றபோதிலும், இந்நாடானது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. பாலஸ்தீன அதிகார சபையிலிருந்து ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட நிதி மீளவும் வழங்கப்படாது, தொடர்ந்தும் தான் தக்க வைத்திருக்க முடியும் என அமெரிக்க அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதேவேளை பாலஸ்தீனர்களுக்காக சேகரிக்கப்பட்ட பல மில்லியன் டொலர்கள் வரையான வரிப்பணம் மிளளிக்கப்படாது என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்த வெற்றிக்குப் பதிலடியாக கிழக்கு ஜெருசலேம் மற்றும் மேற்கு கரையோர பகுதிகளில் மூவாயிரம் ஸ்ரேலியக் குடியிருப்புகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கணனிகள் தொடர்பான குற்றச்செயல் அதிகரித்து வருவதனால் கணனி பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியுள்ளது என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

**உபாயத்தை வகுத்துக்கொள், திட்டமிடு, செயற்படுத்து, வினைத்திறன் மிக்க பாதுகாப்பான வழி** எனும் கருப்பொருளில் நேற்று முன்தினம் நடந்த கணனி பாதுகாப்பு பற்றிய தேசிய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், முக்கிய தகவல்களை திருடவும் நிதியை கையாளவும் அப்பாவி மக்களை மோசடி திட்டங்களால் ஏமாற்றி பணம் பறிக்கவும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை முழுதாக அழித்து விடவும் கணனிசார் குற்றச்செயல்களை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

கடன் அட்டை, வரவட்டை பற்றிய தகவல்களை திருடுவதற்கு உபகரணங்களை கடைகளிலும் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரங்களிலும் குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் பொருத்தி வருவதனால் நிதி சேவைகளில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன என அவர் கூறினார். (அ-2)

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## தமிழக முதல்வர் மன்மோகனுக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் ஒன்றை வரைந்துள்ளார். அக்கடிதத்தில் முதல்வர் எழுதியுள்ளவை வருமாறு,

தமிழகத்தில் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 22 மீனவர்களும் புதுச்சேரியில் காரைக்காலைச் சேர்ந்த 18 மீனவர்களும் மொத்தம் 40 மீனவர்கள் 5 மீன்பிடி படகுகளில் கடந்த 2 ஆம் திகதி கடலில் மீன் பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் அனைவரும் இலங்கை கடற்படையினரால் புல்மோட்டைக்கருகே வைத்து கைது செய்ப்பட்டுள்ளனர். இவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை சிறைக்காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதுபோன்று இந்திய- இலங்கை கடல் எல்லையில் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும் கைது செய்யப்பட்டும் வருகின்றனர். இதனால் இந்திய மீனவர்கள் பாதுகாப்பற்ற நிலையை உணர்கின்றனர்.

இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்தால் இந்திய கடலோரக் காவற்படை அவர்களை எச்சரித்து திருப்பி அனுப்பி விடுகிறது.

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசு தமிழக மீனவர்கள் 40 பேரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

எனவே, இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக இந்த 40 மீனவர்களையும் 5 படகுகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று கூறியுள்ளார். (அ-2)

# முன்னாள் போராளியொருவர் கொழும்பில் காணாமல் போனார்

(கரவெட்டி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி ஒருவர் கடந்த சனிக்கிழமை கொழும்பு கொச்சிக்கடை விடுதியில் தங்கியிருந்த போது காணமால் போயுள்ளார்.

இவர் புனர்வாழ்வு முகாமில் இருந்து விடுதலையாகி தனது குடும்பத்துடன் வல்வெட்டித்துறை ஊரணி பகுதியில் வசித்து வந்துள்ளார்.

தற்பொழுது தனது குடும்ப வறுமையின் காரணமாக மேசன் தொழில் செய்து வந்த நிலையில் தொழில் நிமித்தம் அரபு நாடு ஒன்றிற்கு செல்வதற்காக கொழும்பு சென்று கொச்சிக்கடை விடுதியொன்றில் தங்கியுள்ளார்.

இதன்போதே குறித்த முன்னாள் போராளி சம்பவதினம் அன்று காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடத்தப்பட்டாரா? அல்லது காணாமல் போனாரா? என்ற சந்தேகத்தில் குடும்பத்தினர் அல்லற்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை ஊரணியைச் சோந்த சிவசம்பு பிரசாத் (வயது 24) என்பவரே காணாமல் போயுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-3-24)

# அரவிந்த் குப்தாவும் கோத்தாவும் சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பகுப்பாய்வாளர் அரவிந்த் குப்தாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக மேற்படி நிலையம் அறிவித்துள்ளது. இந்தச் சந்திப்பின் போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா மற்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)




★1724-போலந்தின் டொரூன் என்ற இடத்தில் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து அங்கு கலவரம் மூண்டது.

★1787-டெலவெயர் முதலாவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.

★1815-நெப்போலியனுக்கு ஆதரவாக இருந்த பிரெஞ்சுத் தளபதி மிக்கேல் நேய் என்பவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

★1900- மாக்ஸ் பிளாங்க் தனது பேர்லின் இல்லத்தில் வைத்து புகழ்பெற்ற கரும்பொருள் வெளியேற்ற விதியைக் கண்டுபிடித்தார்.

★1910-யாழ்ப்பாணம், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புதிய கட்டடம் திறக்கப்பட்டது.

★1917-முதலாம் உலகப் போர்: ஆஸ்திரியா-ஹங்கேரி மீது ஐக்கிய அமெரிக்கா போரை அறிவித்தது.

★1941-இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து, ஹங்கேரி, போலந்து, ருமேனியா ஆகியவற்றின் மீது கனடா போரை அறிவித்தது.

★1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர் ஹவாயின் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கினர்.

★1949-சீனக் குடியரசின் அரசு நான்கிங் நகரில் இருந்து தாய்வானுக்கு மாறியது.

★1971-பாகிஸ்தானில் நூருல் அமீன் பிரதமராகவும் சுல்பிக்கார் அலி பூட்டோவை உதவிப் பிரதமராகவும் கொண்ட கூட்டணி அரசை ஜனாதிபதி யாகியா கான் அறிவித்தார்.

★1972-அப்போலோ திட்டத்தின் கடைசி விண்கலம் அப்போலோ 17 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.

★1975-கிழக்குத் திமோரை இந்தோனேசியா முற்றுகையிட்டது.

★1987-கலிபோர்னியாவில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் பயணி ஒருவர் தனது முன்னாள் முதலாளியையும் விமான ஓட்டியையும் சுட்டுக் கொன்றபின் தன்னைத் தானே சுட்டுக் கொன்றான். இதனால் விமானம் தரையில் மோதியதில் அதில் பயணம் செய்த 43 பேரும் கொல்லப்பட்டனர்.

★1988-ஆர்மீனியாவில் இடம்பெற்ற 6.9 ரிக்டர் நிலநடுக்கத்தில் 25 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு 4 இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.

★1988-யாசர் அரபாத் இஸ்ரேலை தனிநாடாக அங்கீகரித்தார்.

★1995-கலிலியோ விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டு 6 ஆண்டுகளின் பின்னர் வியாழனை அடைந்தது.

**பிறப்பு**

★1928-நோம் சோம்சுக்கி, அமெரிக்கப் பேரறிஞர்

**இறப்புக்கள்**

★1947- நிக்கலாஸ் பட்லர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1862)

★1956-லாரி பர்ட், முன்னாள் அமெரிக்க கூடைப்பந்து வீரர்

★1985-றொபேட் கிறேவ்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி.1895)

★1993-வூல்ஃப்காங்க் போல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1913)

★1998- மார்ட்டின் றொட்பெல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1925)

### கலிலியோ விண்கலம்



கலிலியோ (Galileo) என்பது வியாழன் கோளையும் அதன் சந்திரன்களையும் ஆராய்வதற்காக நாசாவினால் விண்ணுக்கு அனுப்பப்பட்ட ஆளில்லா விண்கலம் ஆகும்.

வானியலாளர் கலிலியோ கலிலியின் நினைவாக அவரின் பெயர் சூட்டப்பட்ட இவ்விண்கலம் 1989 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி அட்லாண்டிஸ் மீள் விண்ணோடத்தினால் அனுப்பப்பட்டது. இது ஏவப்பட்டு கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளின் பின்னர் பூமி மற்றும் வீனஸ் கோள்களைத் தாண்டி 1995 ஆம் ஆண்டு டிசெம்பர் 7 ஆம் நாள் வியாழனை அடைந்தது.

முதன் முதலாக ஒரு சிறுகோளை அண்டிச் சென்ற விண்கலம் கலிலியோ ஆகும். முதலாவது சிறுகோள் சந்திரனைக் கண்டுபிடித்தது. வியாழனின் சுற்றுவட்டத்தைச் சுற்றி வந்த முதலாவது விண்கலமும் இதுவாகும். அத்துடன் வியாழனின் வளிமண்டலத்துள் சென்ற முதலாவது விண்கலமும் இதுவே.

**கலிலியோவினால் எடுக்கப்பட்ட படம்**

வியாழனின் நான்கு பெரிய சந்திரன்கள் 2003 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 இல் 14 ஆண்டுகள் விண்வெளியில் உலாவிய கலிலியோ திட்டம் கைவிடப்பட்டது. அன்று இவ்விண்கலம் விநாடிக்கு 50 கி.மீ. வேகத்தில் வியாழனின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு வியாழனுடன் மோதவிடப்பட்டது. பூமியில் இருந்து பற்றீரியாக்கள் எதனாலும் அங்குள்ள சிறுகோள்கள் எதுவும் பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டே கலிலியோ கைவிடப்பட்டது. கலிலியோ கண்டுபிடித்த யுரோப்பா என்ற சந்திரனின் மேற்பரப்பின் கீழே உப்பு நீர் பெருங்கடல் ஒன்று இருப்பதாக நாசா அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் தான் நிரபராதி எனில் அதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்

## பிக்குகளின் அமைப்பு கோரிக்கை

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தான் வகிக்கும் உயர் பதவியின் கௌரவத்தை காப்பாற்ற வேண்டுமாயின் இந்த விசாரணைகள் முடிவடையும் வரை அப்பதவிக்குரிய பொறுப்புகளிலிருந்து உடனடியாக விலகி இருக்க வேண்டும். இவ்வாறு நாடு முழுவதிலும் உள்ள பௌத்த பிக்குமார்களின் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஊடகவியலாளர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவருக்கு எதிரான 14 பாரதூரமான குற்றச்சாட்டுகளை உள்ளடக்கும் குற்றப் பிரேரணை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்தை மதித்து நடக்கும் ஒரு சமுதாயத்திற்கு பிரச்சினைகள் ஏற்படுத்தாத வகையில் நிறைவேற்று அதிகாரத்தையும் சட்டவாக்க அதிகாரத்தையும் நீதி பரிபாலனத்தையும் இம்மூன்று தரப்பினரும் சுமுகமாக நிறைவேற்றுவது அவசியமென்றும் இல்லையானால் சட்டத்தை மதிக்கும் சமூகத்திற்கு இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தரும் அகில இலங்கை பௌத்த பிக்குமார் அமைப்பின் தலைவருமான பேராசிரியர் கும்புறுகமுவ வஜிததேரர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையை அடுத்தே உச்ச நீதிமன்ற கட்டடத் தொடரில் எங்கள் நாட்டின் கலாசாரத்தை துச்சமாக மதித்து சுலோக அட்டைகளைத் தாங்கி எதிர்ப்பு கோஷங்களை எழுப்பும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தது ஆயினும் எவருக்கும் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நீதிமன்ற கட்டடத்திற்குள் நடத்த அதிகாரம் இல்லை.

பிரதம நீதியரசரின் தற்போதைய நடவடிக்கையினால் அவர் வகிக்கும் நீதித்துறையின் உயர் பதவிக்கு அவமானம் ஏற்பட்டிருக்கிறது. மக்களை தமக்கு ஆதரவாக ஏவி விடுவதற்கு பதில் பிரதம நீதியரசர் தமக்கு எதிராக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகைக்கு பதிலளிக்கும் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் கடமை இருக்கின்றது. பிரதம நீதியரசர் பொதுமக்ககளை தமக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக தூண்டிவிடக்கூடாது. பிரதம நீதியரசர் தான் குற்றம் இழைக்காத நிரபராதி என்றால் அதனை அவர் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன் ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (அ-2)

## சுவரொட்டி சித்திர போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட சுகாதார சுவரொட்டிச் சித்திரப் போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் சித்திரக்கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாங்குளத்தில் அமைந்துள்ள துணுக்காய் கல்வி வலயத்தின் கணனி அறை நிலையத்தில் நடை பெறவுள்ளதாக துணுக்காய் கல்வி வலய பணிப்பாளர் எல்.எம். வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு.

**ஆரம்பப்பிரிவு**

ஆ.கலைநிலா (மு/வன்னிக்குளம் அ.த.க.பா), வி.தர்மினி (மு/ஒட்டுசுட்டான் இ.த.க.பா), க.அகிலன் (மு/முத்தையன்கட்டு இ.க.அ.த.க பா).

**இடைநிலைப்பிரிவு**

சி.சரவணா (மு/முத்தையன்கட்டு இ.க.அ.த.க பா), சி.வினோதன் (மு/மல்லாவி ம.க) இருவர் மூன்றாமிடம் இ.நிலாந்தினி (வன்னி விளாங்குளம் அ.த.க.பா), ர.நிதுஷா (மு/முத்தையன்கட்டு வ.க.ம.வி)

**மேற்பிரிவு**

அ.கஜன் (மு/மல்லாவி, ம.க), த.சுஜீபன் (மு/யோகபுரம் ம.வி), கி.விரோஜின் (மு/மல்லாவி ம.க) (அ-15)

# மட்டக்களப்பு மக்கள் பிரியாணி உண்பதற்கு ஜனாதிபதியே காரணம்

## அமைச்சர் மேர்வின் கூறுகிறார்

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழ் முஸ்லிம் மக்கள் அதிகளவில் பிரியாணி உண்கின்றனர். அது மட்டுமல்லாது ஏனையோருக்கும் பிரியாணி வழங்கி மகிழ்கின்றனர். இந்த நிலைமையை உருவாக்கி கொடுத்த பெருமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே சாரும் என மக்கள் அலுவல்கள் அமைச்சர் மேர்வின் சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 14 அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

30 வருடங்களாக போகமுடியாத பாதைகள், செல்லமுடியாத கோயில்கள், தேவாலயங்கள் எத்தனையோ இருக்கின்றன.

எனவே புத்திஜீவிகள் கபீர் ஹாசிம் எம்.பி. உண்மையை பேச வேண்டும். முதலில் நீங்கள் சொந்த ஊருக்கு சென்று பாருங்கள். பயிர்கள் செழிப்பாக வளர்ந்து வருகின்றன. உங்கள் மக்கள் இன்று அதிகளவில் பிரியாணி உண்கின்றனர்.

பிரியாணிகளை ஏனையோருக்கு வழங்குகின்றனர். இவ்வாறான நிலைமையை மட்டக்களப்பில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த பெருமை ஜனாதிபதியையே சாரும் என்றார். (அ-2)

# ஐந்து குழந்தைகளை பெறும் சிங்கள குடும்பத்திற்கு பரிசு

சிங்கள குடும்பங்களில் பிள்ளைகள் பிறப்பது குறைந்துள்ளது. இதன் காரணமாக எதிர்காலத்தில் குறைந்தது 5 பிள்ளைகளை பெற்றெடுக்கும் சிங்கள குடும்பங்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும். இவ்வாறு பிரான்ஸ் நாட்டுக்கான பிரதான சங்க நாயக்கர் பரவாஹெர சந்தரத்ன தேரர் கூறியுள்ளார்.

இத்திட்டம் அடுத்த வருடத்தில் இருந்து அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சிங்கள குடும்பங்கள் குழந்தைகளை பெற்றெடுப்பது குறைந்துள்ளதால் எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமான நிலைமையை எதிர்நோக்க நேரிடும் என்றும் இந்த பாதிப்பு பௌத்த மதத்திற்கும் கெடுதியை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள குடும்பங்களில் பிள்ளைகள் இல்லாது போனால் துறவறம் பேணவும் பிள்ளைகள் இல்லாமல் போகும்நிலை ஏற்படும். இதனால் நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் உள்ள பௌத்தர்களுக்கு ஏற்பட்ட நிலைமைதான் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமையானது இனத்தின் பாரிய அழிவுக்கு வழிகோலும். இதன் காரணமாகத்தான் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் பரவாஹெர சந்தரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உள்ளக பயிற்சி வைத்தியர்களாக ஆயிரத்து 58 பேருக்கு நியமனம்

(கொழும்பு)

மருத்துவ பட்டதாரிகள் ஆயிரத்து 58 பேர் அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி வைத்தியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்றைய தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இவர்களுக்கான இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 20 கோடி சிறுவர்கள் கட்டாய வேலையில்

## புதிய அறிக்கையில் தகவல்

உலகெங்கும் 20 கோடிக்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதுபோல சிறார்களினால் வேலை வாங்கப்படுவது குறைந்து வரும் விகிதம் மிகவும் மந்தமாகவே இருப்பதாகவும் உலக அளவில் கல்வியை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை இது குலைப்பதாகவும் கல்விக்கான ஐ.நா. மன்ற சிறப்புத் தூதர் (முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுன்) அலுவலகத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை கூறுகிறது.

ஆபிரிக்காவில் வேலையில் ஈடுபட நேரிடும் சிறார்களின் எண்ணிக்கை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வாக்கில் மேலும் 1.6 கோடியாக அதிகரிக்கும் என்று ஒரு கணிப்பு கூறுகிறது.

இவர்களில் சுமார் ஒன்றரை கோடி சிறார்கள் எந்த ஒரு பாடசாலைக் கல்வியும் கிடைக்கப்பெறாமலே இருக்கிறார்கள் என அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)



யாழ்.கன்னாதிட்டி பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி தனது பெயரை நேற்று முன்தினம் தொடக்கம் பீப்பீள்ஸ் லீசிங் அன் பினான்ஸ் வி.எல்.சி. என மாற்றம் செய்துள்ளது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.பத்மநாதன் தேசியக் கொடியினை ஏற்றுவதையும் பீப்பிள்ஸ் லீசிங் அன் பினான்ஸ் பி.எல்.சியின் கொடியை அதன் முகாமையாளர் ரி.கெ.ஆனந்தராஜா ஏற்றுவதையும் நிலையான வைப்பு செய்த வாடிக்கையாளர் ஒருவருக்கு மக்கள் வங்கியின் [illegible] நிலையான வைப்புப்பத்திரத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மாணவர்களுடனான கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட இம்முறை க.பொ.த.(சா/த )பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

வடமாகாண கல்விஅமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரினால் நடத்தப்படவுள்ள இக்கலந்துரையாடலில் மாணவர்கள் கலந்து கொள்வதற்கு அவ்வப் பாடசாலை அதிபர்கள் உரிய ஒழுங்கை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (அ-9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டகாசமான இசைப் பேழைகளை களமிறக்கும் பிலிப்ஸ் நிறுவனம் தற்போது ஒரு புதிய டிஜே பார்ட்டி மெசினை களமிறக்கி இருக்கிறது. இந்த புதிய சாதனத்தை ஐபோடில் மிக எளிதாக பொருத்த முடியும். ஐபோட் மற்றும் ஐபோன்களில் பொருந்தக்கூடிய இந்த ஸ்பீக்கர் சிஸ்டத்தில் டிஜே அனுபவத்தைப் பெறமுடியும். இந்த ஸ்பீக்கர் சிஸ்டத்தில் இசைக் கலவையும் செய்ய முடியும்.

இந்த டிஜே சிஸ்டத்தில் யுஎஸ்பி உள்ளதால் யுஎஸ்பி மூலமாகவே இந்த சிஸ்டத்தை ரிசார்ஜ் செய்ய முடியும்.

# 10ஜிபி கோப்புக்களை (File) பரிமாறலாம்

கூகுள் வழங்கும் ஜிமெயில் சேவையே உலகளவில் ஏராளமானோர் பயன்படுத்தி வருகின்றனர். ஈமெயில் அனுப்புவது மற்றும் பெறுவது மட்டும் அல்லாமல் இந்த ஈமெயிலில் இணைத்து பைல்களையும் பரிமாற்றம் செய்துகொள்ளலாம். இதுவரை ஜிமெயிலில் இமெயில் அனுப்பும் போது 25எம்பி அளவு மட்டுமே பைல்களை அனுப்ப முடியும். பெரிய அளவு கொண்ட பைல்களை ஜிமெயிலில் அனுப்ப முடியாதிருந்தது.

ஆனால் இனிமேல் ஜிமெயில் மூலம் 10ஜிபி அளவுள்ள பைல்களை அனுப்பலாம் என்று கூகுள் தற்போது அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு ஜிமெயில் உறுப்பினர்களுக்கு கண்டிப்பாக இனிப்பான செய்தியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த புதிய வசதிக்காக ஜிமெயிலோடு கூகுள் ட்ரைவை இணைத்திருக்கிறது கூகுள். இதனால் ட்ரைவ் மூலம் நேரடியாக பைல்களை இணைத்து ஜிமெயில் மூலம் அனுப்ப முடியும். இதன் மூலம் 10ஜிபி வரை பைல்களை அனுப்ப முடியும். மேலும் இந்த 10ஜிபி என்பது பழைய 25 எம்பியைவிட 400 மடங்கு அதிகமாகும். மேலும் இந்த வசதியைப் பெற ஜிமெயில் உறுப்பினர்கள் ஜிமெயிலின் அப்டேட் வெர்சனைப் பயன்படுத்த வேண்டும்.

மேலும் பைல்களை அனுப்பும்போது ஒரு முறை பரிசோதனை செய்யும் என்று பில் ஷார்ப் தெரிவித்திருக்கிறார். மெயிலை ஜிமெயிலில் உள்ள ட்ரைவ் ஐகனை க்ளிக் செய்து அதன் மூலம் பைல்களை இணைத்து அனுப்ப வேண்டும். ஜிமெயில் அவற்றை மீண்டும் கூகுளின் தயாரிப்பு மேலாளர் அனுப்புவதற்கு முன்பாக இந்த வசதியை குறுகிய காலத்திற்குள் கூகுள் களமிறக்க இருக்கிறது.




கோடிக் கணக்கானோரின் கைக்குள் இருந்து, தகவல் தொழில்நுட்பம் அசுர வேகத்தில் வளர்ச்சியடைய தன்னாலான பங்களிப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கின்றது மவுஸ். இந்த கணனி வன்பொருளுக்கு இம்மாதம் (டிசம்பர்) 9இல், 44 வயதாகிறது.

ஆப்பிள் நிறுவனம் தான் இதனை உருவாக்கியது என்று பலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸ், செராக்ஸ் நிறுவனத்தின் காப்புரிமையைத் திருடி, மவுஸை வடிவமைத்ததாகச் சொல்வோரும் உண்டு. உண்மையில் இதனை உருவாக்கியவர் Douglas Engelbart என்பவராவார். இவர் அமெரிக்க நாட்டின் 87 வயது விஞ்ஞானி. ஸ்டான்போர்ட் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் என்னும் ஆய்வு மையத்தில் பணியாற்றிய போது, மவுஸை இவர் உருவாக்கினார். இதனை உருவாக்கியதைப் பற்றி, இன்றும் மிகவும் சுவாரஸ்யமாகப் பேசுகிறார்.

1963 ஆம் ஆண்டில் மவுஸ் உருவாவதற்கான கட்டமைப்பில் எங்கல்பார்ட் வெற்றி பெற்றாலும், இந்த மவுஸை, 1968இல் தான் இயக்கிக் காட்டினார். அவர் போட்ட கோட்டில் பல நிறுவனங்கள் றோடு போட்டன. Xerox, Apple, Microsoft மற்றும் Logitech ஆகியவை அவர் அறிமுகப்படுத்திய மவுஸில் பல நுணுக்கங்களை இணைத்து, பல வகையான மவுஸ் சாதனங்களை உருவாக்கிக் காட்டின. ஆனாலும், அன்று எங்கல்பார்ட் எந்த செயல்பாட்டிற்காக இதனை உருவாக்கினாரோ, அது இன்னும் மாறவே இல்லை. தொடுதிரை, ஒலி வழி கட்டளை என எத்தனை புதிய வசதிகள் ஏற்பட்டாலும், கைகள் இயக்கத்தில் கம்ப்யூட்டர் இயங்கும் வரை மவுஸ் தேவை இருந்து கொண்டே தான் இருக்கும்.

மவுஸ் உருவான ஆண்டுகளையும், சில குறிப்பிட்ட மாற்றங்களையும் இங்கு காணலாம்.

1963: எங்கல் பார்ட் கொடுத்த கட்டமைப்பில், பில் இங்கிலீஷ் (Bill English) மவுஸ் ஒன்றை உருவாக்கினார். இதில் ஒரு பட்டன் தான் இருந்தது.

1968: எங்கல் பார்ட், முழுமையான மவுஸ் ஒன்றை 90 நிமிடங்கள் இயக்கிக் காட்டி, புதிய சகாப்தத்திற்கு வித்திட்டார். இதில் மூன்று பட்டன்கள் இருந்தன.

1972: ஜாக் ஹாவ்லி (Jack Hawley) மற்றும் பில் இங்கிலீஷ் இணைந்து புதிய டிஜிட்டல் மவுஸ் ஒன்றை செராக்ஸ் நிறுவன கம்ப்யூட்டருடன் இணைந்து செயலாற்றும் வகையில் வடிவமைத்தனர். சிறிய அளவிலான பந்து ஒன்று, இரண்டு ரோலர்களுக்கிடையே செயல்பட்டு, தேவையான இடத்திலிருந்து டிஜிட்டல் சிக்னல்களைக் கையாண்டது. அடுத்த 27 ஆண்டுகளுக்கு இதுவே அடிப்படை மவுஸ் இயக்கத்தினைத் தந்தது.

1982: சன் ஒர்க் ஸ்டேஷன் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்த, மவுஸ் பாடுடன் கூடிய மவுஸ் ஒன்றினை ஸ்டீவ் கிறிஷ் (Steve Kirsch) என்பவர் வடிவமைத்தார். இதே ஆண்டில், லாஜிடெக் நிறுவனம் P4 என்ற தன் முதல் மவுஸினை வர்த்தக ரீதியாக விற்பனைக்குக் கொண்டு வந்தது. இதனை வடிவமைத்தவர் ஜீன்டேனியல் (JeanDaniel). இது அப்போது 300 டொலருக்கு விற்பனையானது.

1983: ஆப்பிள் நிறுவனத்தின் முதல் மவுஸ், அதன் லிஸா கம்ப்யூட்டர் சிஸ்டத்துடன் விற்பனையானது. இதில் ஒரே ஒரு பட்டன் மட்டுமே இருந்தது. இது சர்ச்சைக்குரிய வடிவமைப்பு என்றாலும், ஆப்பிள் நிறுவனத்தின் அடையாளமாக, இது 22 ஆண்டுகள் புழக்கத்தில் இருந்தது. இதே ஆண்டில், மைக்ரோசாப்ட், தன் முதல் மவுஸ் சாதனத்தை 195 டொலர் விலையிட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தியது.

1984: லாஜிடெக் நிறுவனம் தன் முதல் வயர்லெஸ் மவுஸ் சாதனத்தை வடிவமைத்து விற்பனைக்கு வழங்கியது. டிவி ரிமோட் கண்ட்ரோல் போல, இன்ப்ரா ரெட் அலைக் கதிர் வழி இந்த மவுஸ் இயங்கியது.

1986: கீ போர்டுடன் இணையும் வகையில் மவுஸ் ஒன்றினை, ஆப்பிள் உருவாக்கியது.

1987: ஐ.பி.எம். நிறுவனம் புதிய கம்ப்யூட்டர்களை அறிமுகம் செய்தது. உலகின் முதல் PS/2 மவுசும் இதனுடன் வெளியானது.

1991: ரேடியோ அலைவரிசையில் இயங்கும், முதல் வயர்லெஸ் மவுஸினை லாஜிடெக் வடிவமைத்து வெளியிட்டது.

1993: ஹனி வெல் நிறுவனம், முதல் ஆப்டோ மெக்கானிகல் மவுஸினை வெளியிட்டது. இதில் சுழலும் பந்துக்குப் பதிலாக, இரண்டு சிறிய டிஸ்க்குகள், வெவ்வேறு கோணத்தில் வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இதே ஆண்டில் ஆப்பிள் நிறுவனம் வெளியிட்ட Apple Desktop Bus Mouse II மவுஸ் புதிய வடிவமைப்பினைக் கொண்டிருந்தது.

1995: ஸ்குரோல் வீல் கொண்ட மவுஸ் ஒன்றினை, முதல் முதலாக, மவுஸ் சிஸ்டம்ஸ் என்னும் நிறுவனம் வெளியிட்டது.

1998: சிறிய சாசர் கோப்பையைப் போன்ற தோற்றத்தில், ஆப்பிள் நிறுவனம் "hockey puck" மவுஸைக் கொண்டு வந்தது. இந்த மவுஸ் தான் முதன் முதலில், யு.எஸ்.பி. யில் இயங்கும் வரையறைகளுடன் தோற்றுவிக்கப்பட்டது.

2000: ஆப்பிள் நிறுவனத்தின் Pro Mouse வெளியானது. ஆப்டிகல் ட்ரேக்கிங் சென்சார் தொழில் நுட்பம் கொண்டு வெளியான முதல் மவுஸ் இதுவே. இதனுடைய வடிவமைப்பு சற்று வித்தியாசமாக நீண்ட சதுரமாக இருந்தது.

2003: ஆப்பிள் தன் முதல் வயர்லெஸ் மவுஸைக் கொண்டு வந்தது. Apple Wireless Mouse என இதனை அழைத்தது.

2004: லாஜிடெக், இந்த ஆண்டில் அறிமுகப்படுத்திய மவுஸ், ஆப்டிகல் ட்ரேக் செய்வதற்கு லேசர் ஒளிக்கற்றையைப் பயன்படுத்தியது. இந்த வகையில் இதுவே (MX 1000) முதல் மவுஸாகும். எல்.இ.டி. அடிப்படையில் இயங்கிய மவுஸை காட்டிலும், லேசர் இயக்க மவுஸ் மிகவும் துல்லியமாக இயங்கியது.

2005: ஒரே பட்டனுடன் தன் மவுஸினை முன்பு வெளியிட்ட ஆப்பிள், இப்போது Mighty Mouse என்ற பெயரில், நான்கு பட்டன் கொண்ட மவுஸை வெளியிட்டது. ஒவ்வொரு கிளிக் செயல்பாட்டிற்கும், அதில் இருக்கும் சின்ன ஸ்பீக்கர் வழியாக ஒலியினைக் கேட்கலாம்.

2006: வயர்லெஸ் மைட்டி மவுஸ் (Wireless Mighty Mouse) என்ற பெயரில், ஆப்பிள் நிறுவனம் புளூடூத் வயர்லெஸ் மவுஸ் ஒன்றைக் கொண்டு வந்தது.

2008: லாஜிடெக் (ஸ்விஸ்) நிறுவனம் மவுஸ் விற்பனையை 1982ல் தொடங்கி, இந்த ஆண்டில் தன் நூறு கோடியாவது மவுஸை விற்பனை செய்தது.

**டப்லஸ் கார்ல் எங்கல்பார்ட் (Douglas Carl Engelbart):**

87 வயதாகும் இவர் ஓர் அமெரிக்க விஞ்ஞானி. மனிதனையும் கம்ப்யூட்டரையும் இணைக்கும் பிரிவில் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டவர். மனித அறிவுத்திறனை உயர்த்த மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரிய ஆய்வுத் திட்டத்தின் ஒரு சிறிய கண்டுபிடிப்பு தான் மவுஸ் என்கிறார் இவர்.

இதற்கு மவுஸ் என ஏன் பெயர் வந்தது? என்ற கேள்விக்கு எலி போன்ற தோற்றத்துடன் இருந்ததால், வேறு பெயர் இதற்குப் பொருத்தமாக அப்போது தோன்றவில்லை என்கிறார். மவுஸின் இடத்தை வேறு எந்த தொழில் நுட்பமும் நிரப்பாது என்பதில் உறுதியாக உள்ளார் இந்த அமெரிக்க விஞ்ஞானி.







# மைக்ரோசாப்ட் இன் புதிய படைப்பு



முதல் தலைமுறையைச் சேர்ந்த விண்டோஸ் போன் 7.8 இற்கு புதிய அப்டேட்டை வழங்க இருப்பதாக மைக்ரோசொப்ட் அறிவித்திருக்கிறது. இந்த விண்டோஸ் போன் 7.8இல் வர இருக்கும் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் வசதிகள் ஆகியவற்றை உலக அளவில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

அப்டேட் செய்யப்பட்ட இந்த புதிய விண்டோஸ் போன் 7.8ஐ வரும் புத்தாண்டின் ஆரம்பத்தில் களமிறக்க இருப்பதாக மைக்ரோசாப்ட் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறது. இந்த அப்டேட் மூலம் என்னென்ன வசதிகள் இந்த 7.8இல் வரும் என்பதை மைக்ரோசாப்ட் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

ஆனால் புதிய ஸ்டார்ட் ஸ்கிரீன் மற்றும் புதிய லாக் ஸ்கிரீன் ஆகியவை இருக்கும் என்று கூறப்படுகிறது. அதோடு பிரபலமான வீடியோ கேம்களான ஆங்கிரி பேர்ட்ஸ் ஸ்பேஸ் மற்றும் ஆங்கிரி பேர்ட்ஸ் ஸ்டார் வார்ஸ் போன்றவையும் இந்த அப்டேட்டில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஆன்ட்ராய்டு இயங்குதளம் பற்றிய சில தகவல்கள்

ஐஓஎஸ் இற்கு போட்டியாக மொபைல் போன்களுக்காக பிரத்தியோகமாக 2003இல் உருவாக்கப்பட்டதே ஆன்ட்ராய்டு இயங்குதளம். முதன் முதலில் Android, Inc என்ற நிறுவனத்தால் தொடங்கப்பட்டு, பின்னர் கூகுள் நிறுவனத்தால் 2005இல் விலைக்கு வாங்கப்பட்டது. பின்னர் OHA (Open Handset Alliance) என்ற நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது.

ஆன்ட்ராய்டு இயங்குதளம் முழுவதும் சி, சி+ மற்றும் ஜாவா கோடிங்களைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. ஆன்ட்ராய்டு அப்ளிகேசன்கள் சான்ட்பாக்ஸ் எனும் தொழில்நுட்பத்தில் செயல்படுவதால் மிகவும் பாதுகாப்பானது.

கூகுள் தயாரிப்புகளை எளிதில் பயன்படுத்தும் வகையில் உள்ளதால் ஆன்ட்ராய்டு பயன்படுத்தும் மொபைல் போன்கள் ஐபோன்களுக்கு மாற்றாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு மிகவும் பிரபலமடைந்துள்ளது.

முதலில் ஆன்ட்ராய்டு இயங்குதளமானது ஸ்மார்ட்போன்களுக்காக வடிவமைக்கப்பட்டது. ஆனால் அண்மைக் காலங்களில் இது நெட்புக்கள் (Netbooks), ஸ்மார்ட்புக்ஸ் (Smartbooks) மற்றும் ஸ்மார்ட் டிவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும்

## ஆஸி.எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களின் சட்டவிரோத படகுகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் குடிவரவுப் பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு படகுகளை திருப்பி அனுப்பி வைப்பதன் மூலம் இவர்களது வருகையை தடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தரை வழியாகவும் கடல்வழியாகவும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க இலங்கை அரசாங்கத்திற்கு அவுஸ்திரேலியா முழுமையான ஆதரவளிக்க வேண்டும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவுஸ்திரேலிய கடல் எல்லைக்குள் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு பிரவேசிக்க முயற்சித்தால் சர்வதேச கடல் எல்லையுடனேயே படகுகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரை வலுப்படுத்த அவுஸ்திரேலிய கூட்டணி அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்து படகுகளை தடுத்து நிறுத்துவதை விடவும் இலங்கை கடற்பரப்பிற்கு அருகாமையில் தடுப்பது சுலபமானதும் பாதுகாப்பானதுமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# அம்பாறை பகுதியில் விசேட தொழில்நுட்ப வலையமைப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் அடிக்கடி நில அதிர்வுகள் இடம்பெறுவதால் அதனை ஆராய்வதற்கென அப்பகுதிகளில் விசேட தொழில்நுட்பத்துடன் கூடிய வலையமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் கனியவளப் பிரிவின் தலைவர் கலாநிதி என்.பி. விஜயானந்த தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நில அதிர்வின் அளவு, தன்மை, தாக்கம், பலம் மற்றும் அவற்றுக்கிடைப்பட்ட காலப்பகுதி என்பன குறித்து துல்லியமாக அறிந்து கொள்ளும் வகையில் செஸ்மிக் யுனிட் எனப்படும் மூன்று கருவிகள் அம்பாறையின் வெவ்வேறு பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் செஸ்மிக் கருவிகள் பொருத்தப்பட்டதிலிருந்து எவ்வித நில அதிர்வுகளும் உணரப்படாமையினால் தற்போது அம்பாறையில் நிகழ்ந்ததாக கூறப்படும் நில அதிர்வுகள் குறித்து எதனையும் திட்டவட்டமாக தெரிவிக்க முடியாதுள்ளது.

அப்பிரதேச வாசிகளின் கருத்துக்களை தவிர எம்மிடம் வேறு எந்த வகையிலான சான்றுகளோ ஆதாரங்களோ இல்லாத நிலையில் அது தொடர்பில் எம்மால் ஆராய்சிகளை முன்னெடுக்க முடியாமலிருந்தது. அதன் காரணமாகவே விசேடதொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகளை பொருத்தியுள்ளோம்.

குறுகிய காலத்திற்குள் சுமார் 20 தொடக்கம் 25 தரங்கள் நில அதிர்வுகளை உணர்ந்ததாக அப்பகுதி வாழ்மக்கள் கூறுகின்றனர். அதனைத் தவிர நிலத்தில் வெடிப்புக்களோ அல்லது வேறு எந்த வகையிலான தடயங்களோ காணப்படவில்லை. என்றாலும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 5 பேர் அடங்கிய எமது குழுவினர் தொடர்ந்தும் இது குறித்து அவதானித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## நெல்லியடி ம.க பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ராஜராஜேஸ்வரி சத்தியசீலன் பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-9)

# மாணவர்கள் விடுதலையாகும் வரை போராட்டம் தொடரும்

## 5 அரசியல் கட்சிகள் இணைகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மூவரும் விடுதலை செய்யப்படும் வரையிலும் அனைத்து கட்சிகளும் இணைந்து அரசிற்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் எனவும் அப்போராட்டங்கள் எதிர்காலங்களில் விஸ்தரிக்கப்படும் எனவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

பல்கலை மாணவர்களின் விடுதலை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராயும் கூட்டமொன்றினை 5 அரசியல் கட்சிகள் இணைந்து நேற்று முன்தினம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடத்தியிருந்தன.

இச்சந்திப்பு தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த்தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனநாயக மக்கள் முன்னணியின் பாஸ்கரா, புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சியின் செல்வம் கதிர்காமநாதன், தணிகாசலம், நவ சமசமாஜக் கட்சியின் சார்பில் மகேந்திரன் ஜனகன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் இன்று கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடொன்றினை நடத்தி அதில் பல்கலை. மாணவர்களின் மீதான காட்டுமிராண்டித் தாக்குதல், அவர்களின் கைது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு யாழ்.பல்கலையில் இடம்பெற்ற சம்பவத்தினை தெளிவுபடுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாணவர்கள் விடுவிக்கப்படும் வரையிலும் எமது போராட்டம் தொடரும் எனவும் இவ் ஐந்து கட்சிகள் மட்டுல்லாது மேலும் கட்சிகளினை இணைத்து நாம் போராடுவோம் என தனது நிலைப்பாட்டை எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார். (அ-4)

## கண்ணீர் வடிக்கும் கடவுள்



லிந்துலை மட்டுகெல தோட்டத்திலுள்ள கடவுள் சிலை ஒன்றிலிருந்து திடீரென கண்ணீர் வடிந்த அதிசய சம்பவமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. மட்டுகெல தோட்ட மக்கள் கடந்த 1960 ஆம் ஆண்டிலிருந்து திருவிழாக் காலங்களில் கரகம் பாலித்தலுக்காக பயன்படுத்துகின்ற இடத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த சிலைக்கு அன்றையதினம் ஒருவர் விளக்கேற்றுவதற்கு சென்றபோது சிலையிலிருந்து நீர் வடிந்தோடுவதை அவதானித்துள்ளார். இதனையடுத்து இவ்விடத்தில் தற்போது தோட்ட மக்கள் வழிபாட்டை நடத்தி வருகின்றனர். (அ-2)

# 150 ஆவது ஜனன தினமும் இந்துசமய ஊர்வலமும்

(கோப்பாய்)

இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேசக்கிளை நடத்தும் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன தின ஆண்டுவிழாவும் இந்துசமய எழுச்சி ஊர்வலமும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆவரங்காலில் அமைந்துள்ள சிவசக்தி மணிமண்டபத்தில் விழாக்குழுத்தலைவர் சிவ ஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் ஊர்வலங்கள் புத்தூர்விசாலாட்சி சமேத விஸ்வ நாதப் பெருமான் ஆலயத்தில் இருந்தும் அச்சுவேலி உளவிக்குளம் பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் ஆரம்பித்து விழா மண்டபத்தை வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து ஆசியுரையினை வல்லிபுர ஆழ்வார் கோவில் பிரம்ம ஸ்ரீ க.சுதர்சனக்குருக்கள் வழங்குவார்.

மதமாற்றம் தேவைதானா என்ற கருப்பொருளில் பேராசிரியர் தி.வேல்நம்பியும் **இந்து சமய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு** என்ற கருப் பொருளில் கீர்த்தனா குமரேஸ்வரனும் இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் என்ற கருப் பொருளில் நா.விக்னேஸ்வரனும் இந்துசமய ஒற்றுமை குறித்து சி.சஜீவனும் தொண்டும் பேரானந்தமும் எனும் தொனிப்பொருளில் திருமதி கௌரி சுரேசனும் சுவாமி விவேகானந்தர் தொடர்பில் ச.சிவகாந்தனும் வீர இளைஞர்கள் செய்ய வேண்டியவை என்ற பொருளில் எஸ்.க. கிருபாகரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (அ)




எமது பாடசாலை ஆசிரியர்

**திரு.கந்தசாமி ராதா கிருஷ்ணன் - B.A**

(இலங்கை வேந்தன்)

கடந்த 19 வருடங்களாக உடற் கல்வி, நாடகம், நடன, சமயத் துறைகளில் சிறந்து விளங்கி இன்று (07.12.2012) ஓய்வு பெறுகின்றார். அவரது சேவையினைப் பாராட்டுகின்றோம்.

ஆசிரியர் நலன் புரிக் கழகம்
யா/சென்ஜோன்ஸ் மகா வித்தியாலயம்

(1116)

# இரண்டாம் மொழி அறிவை விருத்தி செய்யும் இலவச பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

வித்தகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒரு பகுதியாக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கல்வி அறிவுச்சோலை மூலம் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாணவ, மாணவியரது இரண்டாம் மொழி அறிவினை விருத்தி செய்யும் இலவச பயிற்சி நெறி மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வித்தகபுரம் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் தாமோதரராஜ் அறிவித்துள்ளார்.

மேலும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றும் மாணவ, மாணவியரின் இரண்டாம் மொழி அறிவு (ஆங்கிலம், சிங்களம்) விருத்தி செய்யும் நோக்கில் இரண்டாம் மொழி அறிவு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட எந்தவொரு கிராம சேவகர் பிரிவிலும் வசிக்கும் மாணவ, மாணவியரும் பாடசாலை செல்லாத இளைஞர், யுவதிகளும் இச் செயற்றிட்டத்தில் பங்குபற்றி நன்மையடையலாம்.

இப்பயிற்சி நெறியானது குறைந்தது 6 மாதங்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து 23 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர்/ செயலாளர் கிராம அபிவிருத்திச்சங்கம் வித்தகபுரம் தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு நேரடியாகவோ [illegible] அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையைக் கல்லி எலியைப் பிடித்ததுபோல
~ *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## குதிரைகள் ஓடிவிட்டன வெள்ளிகளை எண்ணியதே மிச்சம்

மன்னன் ஒருவன் தன் அரண்மனைக் குதிரைகளைக் காவல் செய்வதற்காக சேவகன் ஒருவனை நியமித்தான்.

விழித்திருந்து குதிரைகளைக் காவல் செய்யாவிடில் குதிரைகள் ஓடிச் சென்று விடும். எனவே குறித்த சேவகன் உறங்காது விழித்திருப்பதற்கு வழி தேடினான்.

தன் தலைவனாக இருக்கக்கூடிய மன்னனிடம், அரசே! குதிரைக் காவலின்போது உறக்கம் மேலிட்டுக் கொள்கிறது. உறங்காது விழித்திருக்க ஏதேனும் வழி சொல்லுங்கள் என்றான்.

இரவுவேளை, வானத்தில் இருக்கக்கூடிய நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டே இரு. இதுதான் பொருத்தமான வழி என்றான் மன்னன்.

மன்னனின் ஆலோசனைப்படி சேவகன் வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டே இருந்தான்.

விடியற்காலைப் பொழுதில் நட்சத்திரங்கள் எண்ணுவதை விடுத்து குதிரைகளைப் பார்த்தபோது அங்கு எந்தக் குதிரைகளுமே இல்லை.

சேவகன் விழித்திருப்பதற்காக நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டு இருந்தபோது குதிரைகள் வெளியேறிவிட்டன.

விழித்திருந்தமை குதிரைகளை காவல் செய்வதற்காகவாயினும், விழித்திருப்பதற்கான உபாயம் நோக்கத்தை முற்றாகச் சிதறடித்து நட்சத்திரங்களை கணக்கெடுக்கும் தேவையற்ற வேலையைச் செய்யவைத்தது.

இந்தக் கதைக்கும் எங்கள் நாட்டுக்கும் நிறையவே தொடர்பு உண்டு.

எங்கு பார்த்தாலும் படையினர் குவிப்பு. தீபம் ஏற்றினாலும் பயங்கரவாதம் மீண்டும் தலையெடுக்குது என்ற அச்சம்.

நட்சத்திரங்களை எண்ணிய சேவகனின் பணிபோல, ஏகப்பட்ட மனித வளங்கள் தமிழ் இனத்தின் செயற்பாடுகள் பற்றிய கவனத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இன்று நவீன உலகில் பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, தகவல் தொழில்நுட்பம் என்ற எண்ணக்கருக்களுக்கும் இயற்கை அனர்த்தம், சூழல்மாசடைதல், நோய்த் தாக்கம் என்ற பிரச்சினைகளுக்கும் எங்ஙனம் முகம் கொடுப்பது என்று உலகம் முழுவதும் சிந்திக்கும்போது, எங்கள் நாட்டில் தீபம் ஏற்றியது, சுவரொட்டி ஒட்டியது, மாணவர் கைது;விளக்கம்; விசாரணை என்பதே தொழிலாகிவிட்டன.

இந்நிலைமை இப்படியே நீடித்தால் குதிரைகளை இழந்ததுபோல எங்கள் நாட்டு மக்கள் தம் வாழ்வை இழப்பர் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

## இலங்கையில் தினமும் சுமார் ஆயிரம் கருக்கலைப்புக்கள்

இலங்கையில் தினமும் சுமார் ஆயிரம் சட்டவிரோத கருக்கலைப்புகள் இடம் பெறுவதாக மதிப்பிடப்பட்டிருப்பதாக அவிசாவளை பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் மங்கள திசாநாயக்க தெரிவித்தார்.

சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபடுபவர்களில் 90 சதவீதமானோர் திருமணமான பெண்கள் என அவர் குறிப்பிட்டார். இனவிருத்தி ஆரோக்கியம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இச் செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் கருக்கலைப்பு சட்ட ரீதியாக தடைசெய்யப்பட்டிருக்கின்றது இது தொடர்பான சட்ட ஏற்பாடு 1883 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்தாலும் கருக்கலைப்பு இடம் பெறவே செய்கின்றது

இது பெரும் பிரச்சனையாக உருவாகியுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி தினமும் ஆயிரம் சட்டவிரோதக் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன. இதன்படி வருடத்திற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் 2 இலட்சம் வரை இவ்வகை சார்ந்த கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன.

இக்கருக்கலைப்பில் 90% திருமணமான பெண்களே ஈடுபடுகின்றனர். இதற்கு வறுமை இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பிள்ளைகள், பராமரிப்பது கஷ்டம் என்பவற்றை அவர்கள் முக்கிய காரணங்களாக கூறுகின்றனர்.

ஆனால் சட்ட விரோத கருக்கலைப்பு நட[illegible]கைகளில் ஈடுபடுபவர்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் பயிற்சியுற்றவர்களாவர். இதன் விளைவாக பலவிதமான பக்க விளைவுகளுக்கு கருக்கலைப்பு செய்யும் பெண்கள் உள்ளாகின்றனர்.

சட்டவிரோத கருக்கலைப்பின் போது அளவுக்கு அதிகமாக இரத்தப்பெருக்கு ஏற்பட்டு பெண்கள் உயிரிழக்கவும் செய்கின்றனர்.

2010 ஆம் ஆண்டில் மாத்திரம் இவ்வாறு 140 பெண்கள் மரணித்துள்ளனர், சட்டவிரோத கருக்கலைப்பின் விளைவாக ஏற்படுகின்ற மரணங்கள் 2009 ஆம் ஆண்டு மூன்றாவது இடத்திலேயே இருந்தன. அது 2010 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது.

ஆகவே சட்டவிரோத கருக்கலைப்புகளின் பாதிப்புகளை உணர்ந்து அவற்றை தவிர்த்து கொள்வதில் ஒவ்வொருவரும் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 57 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் மாமன்ற தலைமையக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவராக மனிதநேய மாமணி வி.கயிலாசப்பிள்ளை தெரிவானார். புதிய முகாமைப் பேரவையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் தெரிவு இடம்பெற்றது. இதன்போது தலைவராக கந்தையா நீலகண்டன் பிரதித் தலைவராக மா. தவயோகராஜா, பொதுச் செயலாளராக முத்தையா கதிர்காமநாதன், பொருளாளராக வே. கந்தசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் துணைத் தலைவர்களாக சின்னத்துரை தனபாலா, எஸ்.பி.சாமி, மு.பவளகாந்தன், ச.த.சி. அருளானந்தம், த.மனோகரன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், அ.மாணிக்கவாசகர், வே.சந்திரசேகர் ஆகியோரும் பிரதி செயலாளராக சி.சபாநாதன், துணைச் செயலாளர்களாக மா.கணபதிப்பிள்ளை மற்றும் வைத்தியர் ஆ.சிவசோதி ஆகியோரும் தெரிவானர்கள். உபபொருளாளராக க. விவேகானந்தன் தெரிவு செய்யப்பட்டார். (அ-2)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யா/இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலய ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி செபமாலை ஜெயநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க குரு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

(யாழ்ப்பாணம்)

இளவாலை மாரீசன்கூடல் புதிய கயித்தூர் முன்பள்ளி ஒளிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் திருமதி எ.மரீனா தலைமையில் மாரீசன்கூடல் பங்குத் தந்தை அருட்திரு ஜே.ஏ.அருள்தாசன் அடிகளாரின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளவாலை பங்குத்தந்தை அருட்திரு எஸ். ஜே.கியூ.ஜெயரஞ்சன் அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யா/மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை அதிபர் சூ.நோபேட் உதயகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3)

❖❖❖❖❖❖❖❖

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளன பொது மண்டபத்தில் சம்மேளனத்தலைவர் எஸ்.ரி.விமலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-38)




உலக இன்பங்களாக மண், பொன், பெண் என்ற மூன்றையும் குறிப்பிடுவர். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று ஆசைகளால் ஆண்கள் உலகிலே துன்புறுகின்றனர். இந்நிலை பண்டுதொட்டே நிலவியதை தமிழ் இலக்கியங்கள் விரிவாகவே பதிவு செய்துள்ளன. இவ்வகையில் மணிவாசகர் தனது பாடல்களிலும் உலகியல் இன்பம் தொடர்பான செய்திகளை பதிவு செய்துள்ளார். அவருடைய திருவாசகப் பாடல்களில் அவர் வாழ்வியல் பற்றிக்கூறும்போது பெண்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்புகள் அவருடைய கள்ளமற்ற உள்ளத்தைப் புலப்படுத்தி நின்கின்றன.

பெண்களைப் பற்றிப் பாடும் புலவர்கள் அவர்களுடைய உடல் உறுப்புகளை வர்ணிப்பது இலக்கிய மரபாகவுள்ளது. அதையே மணிவாசகரும் பின்பற்றியுள்ளார். அவருடைய வர்ணிப்பு பெண்களை மிக நெருக்கமாகக் கண்ட அனுபவத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

**கொள்ளோர் பிளவ கலாத் தடங்**
**கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்**

என அவருடைய பாடலடிகளைப் பார்க்கும்போது இது உறுதியாகின்றது. பெண்களின் அழகான பிளவ கலா பெரிய பருத்த கொங்கையுடைய தன்மையும் கொவ்வைப்பழம்போல சிவந்த வாயினுடைய தன்மையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் பற்றிக் [illegible] யும் வாயையும் சிறப்பாகக்கூறும் பண்டைத் தமிழ் இலக்கிய மரபையே மணிவாசகரும் பின்பற்றியுள்ளார் எனலாம். பெண்களுடைய உதடுகளின் சிவந்த நிறத்திற்கு கொவ்வைப் பழத்தின் சிவந்த நிறம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இம் மரபினை அப்பர் தமது தேவாரத்திலே மாற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சிவனுடைய திருக்கோலத்தைப் பாடும் அப்பர் **குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்** எனக் கூறியுள்ளார். இங்கு சிவனின் வாயை கொவ்வைச் செவ்வாய் என குறிப்பிடுவது பண்டைய இலக்கிய மரபை மாற்றிய நிலையாக உள்ளது.

பெண்களின் தொடர்பு பற்றிய மணிவாசகரது கூற்று அவருடைய நினைப்பை புலப்படுத்துவதாக உள்ளது. ஆண்கள் தம்முடைய உள்ளத்திலே பெண்கள் பற்றிய எண்ணங்களை உள்ளடக்கியே வைப்பதில்லை. வெளிப்படையாக எல்லோரும் அறியக் கூறும் இயல்புடையவர் என்பதைப் பண்டைய இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. உலக இன்பங்கள் பற்றிய எண்ணங்களோடு மணிவாசகர் வாழ்ந்த போதும் இறைவன் தன்னை விட்டுவிடக்கூடாது என நினைக்கிறார். குருந்தமர நிழலிலே குருவாய் வந்து திருவடி தீட்சை கொடுத்து இறைவன் அவரை ஆட்கொண்டார். ஆனால் இறைவன் அவரை விட்டு நீங்கிய போது. மீண்டும் உலகியல் வாழ்க்கைக்கு அவர் திரும்பிவிட்டார். எனவே மீண்டும் இறைவனைப் பற்றி எண்ணும் நிலையில் அவர் பாடல்களை பாடியுள்ளார்.

அப்போது தன்னுடைய உணர்வைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். **இறைவனே உனக்கு அடியவனாக இருந்து பணிசெய்யவே நான் என்றும் விரும்புகிறேன். இதனை அவர் விழுத்தொழும்**

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

**பின் உள்ளேன்** எனக்குறிப்பிட்டுள்ளார். நான் இப்பணியிலிருந்து வெளியேறவில்லை. உள்ளேயே நிற்கிறேன். ஆனால் முன்பு நான் இப்பணியில் இல்லாதபோதும் என்னைக் கண்டுகொண்டு வலியவந்து ஆண்டுகொண்டதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன் எனக் கேட்கிறார்.

மணிவாசகருடைய இப்பக்தியனுபவம் புதுமையாகவும் உள்ளது. மீண்டும் மீண்டும் தன்னை இறைவன் வலியவந்து ஆட்கொண்ட அனுபவத்தை நினைத்து வாழும் பக்தி நிலை இறைவனை வாழும் உலகியல் வாழ்க்கைக்கு இப்பாடல் வழிகாட்டுகிறது.

**கொள்ளேர் பிளவக லாத்தடங்**
**கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்**
**விள்ளேன் எனினும் விடுதிகண்**
**டாய்நின் விழுத்தொழும்பின்**
**உள்ளேன் புறமல்லேன் உத்தர**
**கோச மங்கைக்கரசே**
**கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்**
**டாண்ட தெக் காரணமே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூ. மன்றங்களுக்கிடையே மென்பந்து துடுப்பாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபை உள்ளூராட்சி மன்றங்களிடையே 12 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியினை நடத்தி வருகின்றது.

இப்போட்டியில் யாழ். மாநகர சபை ஏ, பி அணிகள், நல்லூர் பிரதேசசபை ஏ, பி அணிகள், வலிகாமம் தெற்கு பிரதேசசபை அணி, வலிகாமம் வடக்கு பிரதேசசபை அணி, வேலணை பிரதேசசபை அணி, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அணி, உள்ளூராட்சி மன்றங்களின் அணிகள் பங்குகொண்டன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் தொடக்கம் இடம்பெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை அணியை எதிர்த்து யாழ். மாநகர சபை பி அணியும் யாழ். மாநகர சபை ஏ அணியை எதிர்த்து நல்லூர் பிரதேசசபை ஏ அணியும் மோதின.

இவ் அரையிறுதிப்போட்டிகளில் யாழ்.மாநகரசபை பி அணியும் யாழ்.மாநகரசபை ஏ அணியும் வெற்றிபெற்றன.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்.மாநகரசபை ஏ, பி அணிகள் மோதவுள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தி. பிரகாஸ் அறிவித்துள்ளார்.(அ-9-6)



வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச பாடநூல் விநியோக நிகழ்வு நேற்றைய தினம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடை பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண பிரதம செய லாளர் ஆர்.விஜயலட்சுமி மாணவர் ஒருவருக்கு இலவச பாட நூலினை வழங்கி வைப்பதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.(படம் :-என்.குமார்)

# மகாஜன மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி

அளவெட்டி அபிவிருத்தி மன்றம் மற்றும் மகாஜன சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தினை ஊக்கு விக்கும் நோக்கில் விடுமுறையை புத்தக நண்பர்களுடன் களிப்போம் என்னும் தொனிப்பொருளில் புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளதாக அளவெட்டி அபிவிருத்தி மன்றத் தலைவர் வே.சிவ்ராஜா அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் மகாஜன சபை நூலகத்திலுள்ள நூல்களும் அளவெட்டி மக்களின் வாசிப்புக்கென லண்டனைச் சேர்ந்த அளவை மைந்தன் பொ.கனகேஸ்வரன் தனது பெற்றோர் ஞாபகார்த்தமாக அன்பளிப்பு செய்த ஆங்கில நூல்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் நூல் பிரியர் களினால் தமது வீடுகளில் பேணப்படும் நூல்களிலிருந்து பெறப்படும் நூல்கள் அவர்களது பெயர்களில் காட்சிப் படுத்தப்படவுள்ளது. இந்நிகழ்வின் நோக்கங்களாக நூல்களை சேகரிக்கும் ஆர்வமுள்ளவர்களை பாராட்டுவதுடன் பண்டமாற்று அடிப்படையில் நூல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வலைப் பின்னலை உருவாக்குதல் என்பன அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-21)

# ம.உ.ஆணைக்குழுவின் நடமாடும் சேவை

இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமும் தலைமைக்காரியாலயமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை கண்டாவளை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் மனிதவுரிமை தொடர்பான முறைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் முறைப்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும்பயன்பெற விரும்புவோர் கலந்து பயன் பெறுமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ-3-263)

# யாழ்.பல்கலை. மாணவர்களை விடுவிக்கக்கோரி கனேடிய பல்கலையில் அமைதிப்பேரணி

(கொழும்பு)

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விளக்கேற்றியதைத் தொடர்ந்து அங்குள்ள மாணவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் அடக்குமுறையினைப்பிரயோகித்து வருகின்றனர். மாவீரர் நாளன்று பல்கலைக்கழகத்தினுள் புகுந்து காட்டுமிராண்டித்தனம் புரிந்தது மட்டுமல்லாது மறுநாள் அதனைக் கண்டித்து பல் கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட அமைதிப்பேரணியின் போது மாணவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் கைது செய்யப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவின் கீழ் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இலங்கை அரசின் இந்த அடக்குமுறையினைக் கண்டித்தும் கைதான மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டிருக்கும் படையினரை வெளியேறும்படி தெரிவித்தும் கனடாவில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களும் ஏனைய இன மாணவர்களும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதன் பிரகாரம் யோர்க் பல்கலைக்கழகம், றையர்சன் பல்கலைக்கழகம், றொறன்ரோ பல்கலைக்கழக சென்.ஜோர்ஜ் வளாகம், றொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபுரோ வளாகம், ஒட்டாவா–கார்ல்மடன் பல்கலைக்கழகம், வோட்லூ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இப்போராட்டங்கள் நடைபெற்றன.

தமிழ் மாணவர்களுடன் பெருந்தொகையான பிற இன மாணவர்களும் அவர்களின் மாணவர் அமைப்புகளும் இதில் கலந்துகொண்டன. (அ-2)

# கூட்டமைப்பை பலப்படுத்தவே தீர்வுத் திட்டம் தயாரிக்கின்றோம்

## ரெலோ இயக்கம் அறிக்கை

ரெலோ இயக்கம் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் தீர்வுத்திட்டம் ஒன்றை உள்ளூர் ,வெளியூர் புத்திஜீவிகளை உள்ளடக்கிதயாரித்து அதனை ஏனைய தமிழ்த் தேசியகட்சிகளுடன் கலாந்தாலோசித்து தமிழ் தரப்பில் ஒன்றுபட்ட ஒரு தீர்வாக முன்வைக்கும் விடயத்தை கையாள்வதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்றை அவ் இயக்கத்தின் பொதுக்குழு தெரிவு செய்துள்ளதாக எம்.கே. சிவாஜிலிங்கம் ஊடகத்துறை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இக்குழுவில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான என்.சிறிகாந்தா,ஜனாகருணாகரம்,எம்.கே. சிவாஜிலிங்கம்ஆகியோர்அடங்குகின்றனர். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சிதைப்பதோ அல்லது இலங்கை அரசுடன் நேரடி பேச்சுவார்த்தையை ரெலோ தனித்து நடத்துவதோ அரசாங்கத்திடம் ரெலோ வின் தீர்வுத் திட்டத்தை கையளிப் பது என்றநோக்கமோஎம்மிடம்கிடையாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை ஐந்து கட்சிகளின் கூட்டு என்று மாத்திரம் நின்று விடாமல் ஆறாக, ஏழாக அதிகரிப்பதன் மூலமே சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஒரு தீர்வைப் பெற முடியும்.தமிழ் இனப் படுகொலைக்களுக்காகவும் போர்க் குற்றங்களுக்காகவும் சர்வதேச நீதியை வேண்டி நிற்கும் தமிழ் இனத்தின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டிய தேவை காலத்தின் கட்டாயம் என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தமிழ்மக்களுக்குத் தேவையான தீர்வையே எமது இனம் நாடி நிற்கிறது. அதனை விடுத்து வேறு எவராவது விரும்புகிற தீர்வை அல்ல என்பதையும் ரெலோ இயக்கம் தெளிவுபடுத்த விரும்புகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தனியாகத் தீர்வு யோசனைகளைத் தயாரித்து இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளதாக திருகோணமலையில்நடைபெற்றபொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அந்த தீர்மானத்தை முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்ததாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# ஊடகங்கள் மீதான வன்முறை இன்னமும் கைவிடப்படவில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. தெரிவிப்பு

ஊடக சுதந்திரத்தில் இலங்கை சோமாலியாவைவிட சற்று முன்னிலையில் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2013 வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இவ்வாறு தெரிவிக்கையில், அரசு இன்று ஊடகங்களை அடக்க முயற்சிக்கிறது. ஊடகவியலாளர்கள் மீதான வன்முறை இன்னும் கைவிடப்படவில்லை. ஊடகவியலாளர்கள் கடத்தப்படுகின்றனர். அச்சுறுத்தப்படுகின்றனர்.

லசந்த விக்ரமதுங்க படுகொலை விசாரணைக்கு என்ன நடந்துள்ளது? பிரகீத் எக்னெலிகொடவின் நிலை என்ன? பெட்ரிகா ஜேன்ஸ் நாட்டைவிட்டு வெளியேறியது ஏன்?

சுதந்திரமாக தகவல் அறிந்து கொள்ளும் உரிமை இல்லை. கரு ஜயசூரிய கொண்டு வந்த தகவல் பெறும் உரிமை பிரேரணையை அரசு நிராகரித்தது. அதற்கு பதிலாக மாற்று திட்டம் கொண்டு வரப்படும் எனக் கூறியது. அந்த மாற்று திட்டம் எங்கே?

தகவல் பெற்றுக்கொள்ளும் திட்டத்திற்கு வலு சேர்க்க உலக நாடுகளில் செயற்கைக்கோள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையும் முதலாவது செயற்கைக் கோளை விண்ணுக்கு ஏவியுள்ளதாக அரசாங்க அமைச்சர்கள் சிலர் கூறியுள்ளனர்.

சீனாவில் ஏவப்பட்டது யாருடைய செயற்கைக்கோள் என்பதை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். சீன நிறுவனம் ஒன்று இந்த செயற்கைக்கோளுக்கு அதிக நிதியை செலவிட்டுள்ளது.

குறித்த நிறுவனத்திடம் இலங்கை கடன்பெற்று செயற்கைக்கோள் அனுப்பியிருந்தால் எந்த அடிப்படையில் கடன் பெற்றது? யார் இதனை செலுத்துவது? பொதுமக்களுக்கே இந்த சுமையும் சுமத்தப்படும்.

சீன நிறுவனம்தான் செயற்கைக் கோள் அனுப்பியது [illegible] அதற்கு இலங்கை வான் [illegible] வழங்கியது யார்? எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது குத்தகை [illegible]கா? என்பதை அரசு அறிவிக்க வேண்டும் என்றார். (அ-2)

# முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரிப்பு

## அசாத்சாலி தெரிவிப்பு

முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நாட்டில் அதிகரித்துள்ள நிலையில் அவற்றின் பின்னணியில் அரசு செயற்படுகிறதா என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது என முன்னாள் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் அசாத்சாலி தெரிவித்தார்

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நாட்டில் அதிகரித்துள்ளன. முஸ்லிம்களை இலக்குவைத்து நாடு 100 வருடங்கள் பின்னால் செல்ல முயற்சிக்கின்றது. முஸ்லிம்களை இலக்கு வைப்பதற்காகவே ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது

அதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்குகின்றது. இது ஆபத்தான விடயமாகும் என்பதனால் இது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம்செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டு சங்கம் நீண்ட காலத்துக்கு பின்னர் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பமானது... படங்கள்:எஸ்.கரன்

## நெடுந்தீவு கடற்படைத்தளம் மீதான

# தாக்குதல் குற்றச்சாட்டில் கைதானவர் விடுதலை

நெடுந்தீவு கடற்படைத்தளம் மீது, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து 2007ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பயங்கர தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர் யாழ்.மேல் நீதிமன்றினால் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2007ஆம் ஆண்டு மே மாதம் நெடுந்தீவு கடற்படை முகாமுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தாக்குதல் நடத்தி இராணுவத்துக்கு உயிரிழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த இசைக்கதிர் என அழைக்கப்படும் செல்வரட்ணட் சசிகரன் (வயது 29) என்பவர் வவுனியா மெனிக்பாம் முகாமில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதியன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றஒப்புதல் வாக்கு மூலத்தினை ஒரு சான்றாக வைத்து யாழ்.மேல் நீதிமன்றிலும் வவுனியா மேல் நீதிமன்றிலும் இவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு 05.10.2012 அன்று யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் குறித்த நபரினால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவரினால் சுயமாக வழங்கப்படவில்லை எனவும், கட்டாயத்தின் பேரிலேயே பெறப்பட்டுள்ளது எனக் கூறி நிராகரித்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு தீர்ப்பிற்காக நேற்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபர் மீது வேறு குற்றச் சான்றுகள் எதுவம் காணப்படமையால் அவரினை நிரபராதி என கண்டு மன்று விடுதலை செய்துள்ளது.

குறித்த நபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்திலும் அதே குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை கொண்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அவ் வழக்கில் இருந்தும் விரைவில் விடுதலையாக முடியும் என அவர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி மு.றெமீடியஸ் தெரிவித்தார். (எ-4)

# முதியவர்களுக்கான கொடுப்பனவு

யாழ்.பிரதேச செயலக பிரிவிலுள்ள 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான நவம்பர் மாதத்திற்கான ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு உரிய தபாலகங்களில் இன்று தொடக்கம் வழங்கப்படுகிறது.

இக் கொடுப்பனவு பெறுவதற்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பணம் பெறும் அட்டையை பெற்றவர்கள் தங்களுக்குரிய தபாலகங்களில் சென்று பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (எ)

# கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி, பேருந்துகளில் கடமையில் ஈடுபடும் சாரதி,நடத்துநர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் போக்குவரத்துப் பொறுப்பாளர்களாலும் நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தலைவர் கெ.கெங்காதரன் அறிவித்துள்ளார். (எ)

# இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலையின் ஆரம்ப வகுப்புகளுக்கான சிங்கள மொழி கற்றல் விழா இறுவட்டு வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-11)

# பல்கலை ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டம்

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு கலைப்பீட சிரேஷ்ட பொது அறையில் இடம்பெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட மாணவர்களினை விடுவிப்பது தொடர்பில் ஆராயப் படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனவே இக்கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-4)

# மாற்றுவலுவுடையோர் தின விழா

யாழ்ப்பாணம் முத்துத் தம்பி மகா வித்தியாலய விசேட கல்விப் பிரிவின் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தி.சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

# கிராம அபிவிருத்தி சங்க நிர்வாக சபை தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கம் மீளச் செயற்பட ஆரம்பித்துள்ளது. வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு சங்கத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகக் குழுவில் தலைவராக ஒய்வுபெற்ற அதிபர் ந.இராசதுரையும், செயலாளராக உப தபாலதிபர் ச.க.சதீபனும், பொருளாளராக தபால் ஊழியர் ந.சசிதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவராக ஓய்வுபெற்ற தபால் ஊழியர் பா.வரதராஜாவும், உப செயலாளராக உப தபாலதிபர் சா.யசோதினியும், கணக்காய்வாளராக வேலணை பிரதேச செயலக பிரதம எழுதுவினைஞர் கு.தேவிகாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகக்குழு உறுப்பினர்களாக செ.கலைச்செல்வன், செ.இளந்திரையன், சி.சிறிசங்கர், சீ.துஷாகரன், க.சுகந்தினி, மா.ஜெயானந்தினி, த.சுபகிருமலர், கு.கிருஷ்ணவேணிஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிர்வாகக் சபைக் கூட்டத்தில் ஊரதீவு J/22 கிராமஅலுவலர் க.வாகீசனும் கலந்து கொண்டார். (எ)

# இதுவன்றோ நான் பெற்ற சாதனை



தீக்கற் பாறையாய் இருந்த என்னில்
தீட்டினாய் சிற்பம் - சிறப்புற வைத்தாய்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அன்னை
போற்றிப் பணிகின்றேன் மலரடி சரணம்

தென்னோலை இடுக்கில் தடியைச் செருகி
உன்னாரம்பம் எனப்பாயப் பழக்கி
இந் நிலைக்குச் சுழியிட்ட சுகிர்தா மிஸ்.
இந்து ஆரம்பப் பள்ளி அன்னை
இந்த இருவருக்கும் என் முதல் நன்றி

வேண்டிய அனைத்தையும் விருப்புடன் வழங்கி
ஆசீர்வதித்து அரவணைத்திடும் - என்
அதிபர் திரு. வீ. கணேசராஜா
பாதத்தில் சிரம் பணிகின்றேன் அடுத்து

விளையாட்டுத் துறைப் பொறுப்பதன் மூலம்
விவேகம். கட்டுப்பாடு புகட்டி
அடி மனதில் என்னை இருத்தி வாழ்த்திடும்
ஆசான் ஜெயரட்ணராஜா பாதம் தாழ்கிறேன்

காலை மாலை - ஏன்காணும் போதெல்லாம்
என் கவனிப்பே தன் பணியாகி
பார்த்தனுக்கொரு பரந்தாமன் போன்ற
துருவ உடு சுவாமிநாதன் என் ஒரு கண்ணே
எதிர்ப்புகள் இதனால் ஏற்பட்டன பல
எல்லாம் பரிதி முன் பனிபோலாகின
இதயத்தில் உம் உரு என்றும் இருக்கும்
உம்தாள் பணிந்தேன் ஏற்க என் நன்றி

இடுப்பை உயர்த்து. காலைக் கீழ் வளை
களைத்துவிட்டாய் நீ. இதற்குப் பாஸ் (Pass) கொடு
சமநிலை தளம்புறாய். ஆணியை பூட்டு
அரையடி இடைவெளி. ஏன் அவசரப்படுகிறாய்
சூட்சுமம் அனைத்தும் சூசகமாகவே
பயிற்றி பாய்ந்திடச் செய்யும் சிற்பி
பயிற்சியில் துரோணாச் சாரியார் எனக்கு...

நான் பார்க்கும் மறு கண் ரமணன் அண்ணா
வேதனம் இல்லை விளைச்சல் அவர்க்கே - ஆம்
சாதனை இருப்பின் சமர்ப்பணம் - உமக்கே

இறைவன் சிவன் கோயில் தொடங்கி
இந்து அன்னை ஆலயம் வரை
ஒரு மைல் மேலாய் (B)பாண்ட் இசை வழங்கி
ஒலியையும் பரப்பி உயர்வினைத் தந்தீர்
மாதா. பிதாவுடன் கௌரவம் வழங்கி
மகிழ்வுடன் மதிப்பினர் ஆக்கினீர் எம்மை - அடிப்படை
காரணம் கணேசன் அண்ணா - அத்துடன்
கனபேர் நீங்கள். செயலர். கப்டன்.
முன்னாள் துணைவேந்தர். உங்கள்
பாதக் கமலங்களில் பணிகிறேன் என்சிரம்

எமது மண்ணெனில் ஆதரவாயிரம்
மெல்போர்னில் தனி மரமே ஆவனோ?
என்ற எனது ஏக்கம் தகர்ந்தது
அந்நிய மொழி நண்பர் ஆச்சரியப்பட
இதைவிட உனக்கினி என்னவேண்டும் என
இறுமாப்பெய்த வைத்த ஓ.பீ.ஏ (OBA)

மெல்போர்ன். இங்கிலண்ட்
கொழும்பு. யாழ் என
பழைய மாணவர் குழு ஆதரவு
உங்களின் பணிக்கு ஈடு இணை இல - ஆனால்
நும்பணி பின் நான் தொடர்வேன் சபதம்

ஸ்போட்ஸ்கூல் (Sports School) எனும்
புலமையில் உயர்ந்த
மத்திய கல்லூரி ஆசிரியர்கள்
மாணவர் தலைவர். சுகி சேர் தலைமையில்
இந்துவுள் நுழைந்து இச் செந்துவுக்காக
பூமாலை. பாமாலை
புகழ் வாழ்த்துரைகள்
பூணவைத்து ஈந்த கௌரவம்
பாக்கியசாலி நான். சாதனை இதுதான்
உங்கள் அதிபர் முதல் அனைவர் காலிலும் - என்
இதயக் கமலம் இதோ ஏற்றிடுவீர்.

சின்னவன் இவன் செய்யும் சிறுகுசும்புகள்
- உம்மிடம்
செல்லப் பேச்சைக் கேட்டிடத்தானே
அத்தனையும் பொறுத்தாளாக்கிவரும்
ஆசிரியர்கள். பிரதி அதிபர்கள். நண்பர்கள்
இன்னா செய்யும் எனக்கு வள்ளுவன் வழி
பொன்னாடையும். பரிசிலும் ஈந்து
நன்னயம் செய்யும் தும் பாதத்தில் பணிகிறேன்.

செந்துவின் சிங்கள நண்பர்கள் - எழுவர்
பண்பையும். அன்பையும் பழக்கி விட்டனர்
ஆற்றல் மிகு சிறியானி அன்னை - பயிற்சி
ஆயர்கள் சுமேத. குலதுங்க
அனைவர்க்கும் என் நன்றிகள் கோடி

சென் ஜோன்ஸ் பழைய மாணவன் - நிருஷன்
மெல்போர்னில் பரிசுடன் Keep it up என்றே
பரம்பரைப் பண்பால் - என்
இதயத்தில் உறைந்தீர்

முகத்தைப் பார்த்து தேவையுணர்ந்து
நிதிவளம் சேர்த்த ரவி சேர். நன்றி
அனைத்திலும் ஆதரவாக நின்ற
உதவி. பிரதி. வலய. மாகாணக் கல்வி
பணிப்பாளர்களே அனைவருக்கும் நன்றி

மாதா. பிதா வழி நண்பர்களாகி
நேரிலும். தொலைபேசி மூலமும் - வாழ்த்திய
நல்மனம் உங்கள் அனைவருக்கும் நன்றி

உயர்வையே எண்ணி உற்சாகமூட்டி
ஊக்கமும் தேவையும் நிறைவு செய்திடும்
ஆளுநர். செயலர்கள். அமைச்சர் - மேலும்
உற்சாகப் போதையை ஊட்டிடும் - அன்பு
ஊடகங்களே நன்றி பல் கோடி
உங்கள் உறவினன் ஆகினேன் - இறைவா
இதுவன்றோ இங்கு நான் பெற்ற சாதனை.

இரட்ணசிங்கம் செந்தூரன்
தரம் - 10. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(C-1700)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் அதிகரித்துச்...

நாட்களில் மட்டும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை இருபதுக்கும் அதிகம் என கூறப்பட்டது.

இரகசியமான முறையில் முன்னாள் போராளிகள் உட்பட பலரின் கைதுகள் இடம்பெறுகின்ற போதும் கைது செய்யப்படுபவர்கள் குறித்தோ, கைதுக்கான காரணம் குறித்தோ தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும் இவ்வாறு கைது செய்யப்பட்டு பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ்.மனிதவுரிமை பிராந்திய காரியாலயத்தில் முறையிட்டு வருகின்றனர்.

எனினும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவருடைய முறைப்பாடுகளும் யாழ்.மனிதவுரிமை பிராந்திய காரியாலயத்தில் கிடைக்கப்பெறவில்லையென மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற மூன்று முறைப்பாடுகளில் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறை, சுன்னாகம், கோப்பாய் போன்ற பிரதேசத்தினை சேர்ந்தவர்களுடையது என்றும் பளையில் இரு் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் ஏழு முறைப்பாடுகளும் அதில் 5 பேர் கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர் எனவும் ஏனைய இருவர் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றையதினம் கைது செய்யப்பட்டவர்கள் ஐவரில் 25 வயதுக் குட்பட்ட இளைஞர்களும் உள்ளார்கள் என தெரியவருகின்றது. இவ்வாறு பயங்கரவாத குற்றத்தடுப்புப்பிரிவினரின் கைது சம்பந்தமாக கடந்த மூன்று நாட்களில் 12 முறைப்பாடுகள் யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளதாகவும் இணைப்பாளர் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானோர் முன்னாள் போராளிகள் எனவும் புனர்வாழ்வளிக்கப்பட்டபின்னர் கைது செய்ய படுவதாகவும் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கை இதுவரையிலும் இருபதிற்கும் மேற்பட்ட எண்ணிக்கையாக இருக்கலாமெனவும் ஒரு சில நாள் கடந்த பின்னரே மனிதவுரிமை ஆணைக்குழுவில் இவர்களின் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுவதோடு நேற்றையதினம் ஒரு குழந்தையின் தாய் ஒருவர் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

எனினும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது கண்டனத்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழில் உள்ள பொலிஸாருக்கும் இவ்வாறான கைதுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் இங்குள்ள பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை இன்றைய தினமும் ரி.ஐ.டியினருடைய கைது நடவடிக்கை தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-4)

## ஐ.நா. அறிக்கை விவ...

பரிந்துரைகள் குறித்து ஆராய இந்த விசேட குழுவை ஐக்கிய நாடுகள் அமைப்பு நியமித்துள்ளது மேற்படி குழுவின் தலைவராக அமைப்பின் பிரதி பொதுச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக நெசர்கி கூறியுள்ளார். (எ-11)

## 130 டெங்கு நோயா...

பேருக்கு டெங்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் நாள் ஒன்றுக்கு சராசரியாக இரண்டு பேர் டெங்கு நோயாளராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் பின்பு அந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து கடந்த மூன்று மாதங்களில் நாள் ஒன்றுக்கு 5 பேர் டெங்கு நோயாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட கடந்த மாதத்தின் பிற்பகுதியிலும் இம் மாத முற்பகுதியிலும் நாள் ஒன்றுக்கு சராசரியாக 7 பேர் டெங்கு நோயாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என அந்த புள்ளி விபர தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பிராந்திய கிளையில் பொதுக் காப்புறுதி துறையில் (Sales Executive), சாதனை புரிந்து தாய்லாந்து (Bangkok) சுற்றுப் பயணம் (07.12.2012) மேற்கொள்ளும்

**தங்கராசா இளங்கேஷ்வரன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

முகாமையாளர்,
யாழ்.பிராந்திய கிளை
உத்தியோகத்தர்கள்.

(சி-1693)


## 10 மாணவர்களைத் தேடி...

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் 10 யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பெயர் குறிப்பிடப்பட்ட பெயர்ப்பட்டியல் ஒன்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருக்கு நேற்றையதினம் பயங்கரவாத குற்றத்தடுப் புப் பிரிவின் வவுனியா அலுவலகத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களினை தம்மிடம் விரைவில் சரணடைய ஏற்பாடு செய்யுமாறு குற்றத்தடுப்புப் பிரிவினர் பல்கலைக்கழக நிர்வாகத்திணரிடம் கேட்டுள்ளனர்.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களினை சரணடைய வைப்பதா? அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதா? என்பது தொடர்பிலான அவசரக்கூட்டம் நேற்றையதினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதில் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் முடிபு எடுப்பதற்கிடையில் முந்திய மருத்துவபீட பீடாதிபதி பயங்கரவாத பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள, தனது துறையினரைச் சேர்ந்த 5 மாணவர்களினையும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் சரணடைய வைத்துள்ளார்.

முகாமைத்துவ பீடத்தினைச் சேர்ந்த மேலுமொரு மாணவன் அவரது பெற்றோரினால் சரணடைய வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய நால்வரும் விஞ்ஞான பீடம் மற்றும் முகாமைத்துவ பீடத்தினைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகின்றது.

இவர்கள் நால்வரும் இவர்களுடைய பெற்றோர்கள் விரும்பினால் பல்கலைக்கழகத்தினூடாக சரணடைய வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ் பெயர்ப்பட்டியலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும் உள்வாங்கப்பட்டுள்ளதோடு இவர்கள் இன்று சரணடைவார்கள் என மாணவத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இவ்வாறான பல்கலை மாணவர்களின் தொடர்ச்சியான திடீர் கைதுகள், தேடுதல்கள் பல்கலைக்கழகத்தினைச் சுற்றி பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் என்பவற்றாலும் தற்போது இடம் பெறும் இராணுவப் பிரசன்னங்களாலும் யாழ்.பல்கலையே அச்சத்தில் உறைந்துள்ளது. எந்நேரமும் என்ன நடக்கும் என்ற பயப்பீதியில் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளதாக பேராசிரியர்கள் சிலர் தெரிவிக்கின்றனர். மேலும் ஏற்கெனவே 3 மாணவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-4)


25வது வருட கல்விச் சேவையில்....
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
புதிய கல்வியாண்டு - 2013
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் : 09-12-2012 ஞாயிறு 9.00மணி
அனுமதிகள் இன்று முதல்...

ஆஸ்திரேலியா
5 வருட குடும்ப விசா
சட்டரீதியான ஆலோசனை
பெற இறுதிநாள் - 15.12.2012
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 221 9016
(C-1699)

நியூசிலாந்து
Student Visa
IELTS தேவையில்லை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 221 9016
(C-1699)

பட்டதாரிகள் இலகுவில்
ஆஸ்திரேலியா செல்லலாம்
Skill Migration
ஆசிரியர்கள் என்றால் பட்டபின் கல்வியியல் டிப்ளோமா அவசியம்.
IELTS இலவசம்(நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 221 9016
(C-1699)

சிவ சித்தர் குருகுலம்
EASY ENGLISH
...711


## ஊடகவியலாளர்களை...

உறைந்துள்ளனர். இவ்வாறு ஊடகவியலாளர்களினை படம் எடுக்கும் சம்பவம் யாழ்.பல்கலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தினையடுத்தே அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் யாழ்.பல்கலையில் இராணுவம் மற்றும் பொலிஸாரினால் மாணவர்கள் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்படுவதனை தமது துல்லியமான புகைப்படங்கள் மூலம் யாழிலுள்ள ஊடகங்கள் வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-4)

## திடீர் கைதுகளா...

தொண்டு நிறுவனங்கள் என அலைந்து திரிவதனையும் அவதானிக்க முடிகின்றது. புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதன் பின்னர் குடும்பத்தில் மலர்ந்த மகிழ்ச்சியினை மீண்டும் பறிப்பதாக அவர்கள் கதறுகின்றனர். பாடசாலைச் சிறுவர்களுடைய தந்தைமார்களும் கைது செய்யப்படுவதாகவும் அதனால் அவர்கள் கல்வியினை இடைநிறுத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்ட தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-4)

## விசாரணையிலிருந்து...

தொடர்பில் முன் கூட்டியே தீர்மானங்களை எடுத்துவிட்டதாக தாங்கள் உணர்ந்த தாகவும் இவர்களின் விசாரணையில் தங்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதால் விசாரணையிலிருந்து தாங்கள் வெளிநடப்பு செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்கள் சிலர் இது குறித்த முன் முடிபுகளுக்கு வந்திருப்பதாக எந்த அடிப்படையில் நீங்கள் முடிபு செய்தீர்கள் என்று கேட்டபோது, தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை தாங்கள் வெளியில் சொல்லக் கூடாது என்பதால் தங்களால் இது குறித்து விபரமாக இப்போதைக்கு வெளியில் கூற முடியாது என்று பதிலளித்தார் கந்தையா நீலகண்டன்.

அளிக்கப்பட்ட ஆவணங்களை படித்துப்பார்த்து பதிலளிப்பதற்கு மேலதிக அவகாசம் அளிக்கப்பட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளில் ஷிராணி பண்டாரநாயக்க மீண்டும் பங்கேற்பரா என்று கேட்ட போது அது குறித்து இப்போதைக்கு பதிலளிக்க முடியாது என்றார் அவர்.

இதேவேளை நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் நேற்றைய நிகழ்வுகள் குறித்து கருத்துத் தெரிவித்த தெரிவுக்குழுவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, இந்த தெரிவுக்குழு செயற்பட தொடங்கிய நாள் முதல் நேற்றுவரை எதிர் தரப்பிற்கு எந்த ஆவணங்களும் கையளிக்கப்படவில்லை யென்று கூறினார்.

முதல்முறையாக நேற்று அவர்களுக்கு சுமார் 50 ஆவணங்கள் அளிக்கப்பட்டதாகவும் அவற்றுக்கான பதில்களை ஷிராணி தரப்பு வழக்கறிஞர்கள் இன்று வெள்ளிக்கிழமை மதியம் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்ட தாகவும் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணங்களை படித்துப்பார்க்கவும் அதில் கூறப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து ஆராயவும் தமக்கு மேலதிக அவகாசம் தேவையென்று ஷிராணி தரப்பு வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்த லக்ஷ்மன் கிரியல்ல, அவர்களின் இந்தக் கோரிக்கை ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டதாகவும் கூறினார்.

இந்தக் கோரிக்கைகளை நிராகரிக்கும் போது ஆளும் அரசு தரப்பு உறுப்பினர்கள் மோசமான வார்த்தைகளை பயன்படுத்திய தாகவும் கிரியல்ல தெரிவித்தார்.

இந்த விசாரணை நடைமுறைகள் நீதியாகவும் நேர்மையாகவும் இருக்காதென்று தாங்கள் நினைப்பதாக தெரிவித்த தலைமை நீதிபதியும் அவரது வழக்கறிஞர்களும் வெளிநடப்பு செய்ததாகவும் கிரியல்ல கூறினார். (எ-11)

## மரண அறிவித்தல்



**வின்சன் சுதர்சிங் (ரவீந்திரன்)**

குருநகரைப் பிறப்பிடமாகவும் இராஜசிங்கம் வீதி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன் சுதர்சிங் (05.12.12) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.12) இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் யா/ மரியன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: எஸ்.விஜயகாந் -மகன்
(சுகாதார குழுத் தலைவர்,
யா /மாநகர சபை)

திருநகர்,
யாழ்ப்பாணம். (1115)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org